சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 1	இதழ்: 9	பிப்ரவரி - 2019	தட்சிணை
VOL: 1	ISSUE-9	FEBRUARY - 2019	DONATION

தனிச்சுற்றுக்கு மட்டும்



மந்திராலய மகான் ராகவேந்திரர்



உன்னை
நோக்கி
வருகின்றோம்!

ஜெய் சாய் ராம்

சமர்த்தா

டூர்ஸ் – டிராவல்ஸ்

ஷீரடி புனித யாத்திரை

OM

Spiritual Journey to Shiridi

சென்னையிலிருந்து விமான பயணம்

Package Price
₹9900/-
prices vary on the marked dates

வி.ஐ.பி.தரிசனம், 4 ஸ்டார் ஹோட்டல்
புனே-சீரடி ஏசி பஸ் உட்பட

பிப்ரவரி:
3-4, 21-22

மார்ச்: 1-2, 14-15,
22-23, 29-30

₹10,900/-
மும்பை வழியாக

வி.ஐ.பி.தரிசனம், 4 ஸ்டார் ஹோட்டல்
மும்பை-சீரடி ஏசி பஸ் உட்பட

பார்க்கும் இடங்கள்

மஹா கணபதி கோயில், ஸ்ரீ சனிதேவ் கோயில், ரேணுகாதேவி கோயில், வாஹேஸ்வரர் கோயில்

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

சமர்த்தா டூர்ஸ் & டிராவல்ஸ்

எண்.11, முதல் மாடி, வெங்டேஸ்வரா அக்ரஹாரம் ரோடு (சாய்பாபா கோவில் எதிரில்)
மைலாப்பூர், சென்னை-4. Email: samarthatoursandtravels21@gmail.com

98428 20509 / 73734 09000 / 044-4855 7749

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு-1 மலர்-9 பிப்ரவரி-2019

வெளியிடுபவர் / ஆசிரியர்
V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்
S.ஜெயந்தி

விளம்பர பிரிவு
திரு.T. கார்த்திகேயன், கோவை
8778874339

சிட்டி சர்க்குலேசன்
திரு.R. அபிஷேக், சென்னை

பொது ஜனத் தொடர்பு
திரு. அன்புக் கண்ணன்

கௌரவ ஆலோசகர்கள்
திரு. L காமராஜ், சென்னை
திரு.B.S.ஹரி கிருஷ்ணன், சென்னை
A.சரண்யா, M.Com
Dr.G.கீர்த்தி சௌஜன்யா, B.D.S., சென்னை
திரு.N.ராகவேந்திரன், சென்னை
திரு.B.முருகன், சோழவந்தான்
திரு.T.ரவி- குடந்தை
திரு.S.P.பாண்டியன், குடந்தை
திரு. G.S.சந்திரசேகரி, HCL., சென்னை

வலைதள வடிவமைப்பு
திரு.பா.செந்தில் குமாரி
சாயி பக்தி சேவகர்
திரு.சாயிநி மாதவராஜ்.G

இதழ் வடிவமைப்பு
சிகரம் பதிப்பகம்

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்
எண்:17/7,A- பழனியப்பா முதல் தெரு,
1வது மாடி, அயனாவரம்,
சென்னை 600 023.
செல்: 8825831068, 9941816692



அமுத மொழி

என்னிடம் நீ பூரண சரணாகதி அடைந்தால் உன்னுடைய அனைத்து ஆசைகளையும் நிறைவேற்றி உன்னை எல்லா துன்பங்களில் இருந்தும் விடுவிப்பேன். நீ என் கதைகளைக் கேட்டால் மனம் அமைதிப்படும்.

கேட்பதிலும் பேசுவதிலும் உள்ள அனைத்து பாவங்களும் தீர்ந்து விடும். என்னை அடைவதற்கு எந்த யோக சாதனைகளும் தேவை இல்லை.ஆறு சாத்திரங்களை அறிய வேண்டியதும் இல்லை.

படைப்பவனும்,காப்பவனும் ,அழிப்பவனும் நானே என்ற உறுதியான நம்பிக்கை யும் விசுவாசமும் இருந்தால் போதும். நீ என் கடைக்கண் பார்வை பெற்று விடலாம். என் கடைக்கண் பார்வை ஆண்டியையும் அரசனாக்கும் சக்தி பெற்றது.

- ஷீரடி சாய் பாபா

ஆசிரியர் பக்கம்...

அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!



சாயியின் அருளால் ஒன்பதாம் இதழ் மூலம் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. சென்ற இதழின் வெளியீட்டு விழா 6.1.2019 ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு நமது ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபையில் (17/7A. பழனியப்பா முதல் தெரு, முதல் மாடி, அயனாவரம், சென்னை-23) தொடகிற்று.

விழாவிற்கு சேலத்தில் இருந்து அன்புச் சகோதரர் திரு கலியன் அய்யா அவர்கள் வருவதாக தொலைபேசி மூலம் கூறி யிருந்தார். சொன்னது போலவே காலை பத்து மணிக்கெல்லாம் வந்து விட்டார்.

சாயி மகராஜ் பஜனை குழுவினர் பக்தி பாடல்கள் பாட, விழா இனிதே தொடங்கியது. திரு கலியன் அய்யா அவர்கள் ஒரு மணிநேரம் பாபா பக்தர்களிடையே சொற்பொழிவு ஆற்றினார். பிறகு பக்தர்களின் நலனுக்காக பிரார்த்தனை செய்தார்.

அவரின் தன்னலம் கருதாத அயராத பிராத்தனை சேவைக்காக ,நமது ஸ்ரீ சாய்ராம் ஆத்மஞான சபையின் சார்பாகவும், சாயி மகராஜ் குருவை தேடி இதழின் சார்பாகவும், திரு.கலியன் அய்யா அவர்களுக்கு





"பிரார்த்தனை செம்மல்" என்ற பட்டம் வழங்கி கவரவிக்கப்பட்டது.

"பிரார்த்தனை செம்மல் "திரு. கலியன் அய்யா அவர்கள் இதழை வெளியிட அன்புச் சகோதரரும், ஆட்டோ ஓட்டுனருமான திரு D.ராஜசேகர் அவர்கள் இதழை பெற்றுக் கொண்டு சிறப்பித்தார்கள்.

விழாவில் திரு.மாதவராஜ் திருமதி. ஜெயந்தி முரளி, திரு.உமாசங்கர்,திரு V.R.ரமேஷ் குமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மாதவராஜ் அவர்கள் வந்திருந்த அனைவருக்கும் பாபா காலண்டர் வழங்கினார்.

ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபையினர் விழாவிற்கு வந்திருந்த அனைவருக்கும் அன்னதானம் செய்வித்தனர். மதியம் 2 மணிக்கு விழா இனிதே நிறைவு பெற்றது.

17.1.19 அன்று நமது ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை யின் சார்பாக 46 நபர்கள் கொண்ட குழுவினர் பாபாவின் ஆசியால் சீரடி யாத்திரை மேற்கொண்டனர். அதைப்பற்றிய விரிவான கட்டுரை தனியாக இடம் பெற்றிருக்கின்றது.

1.1.2019 அன்று அதிகாலை ஆகம விதிமுறைகளை மீறி தன்னுடைய சுயநலனுக்காக ஆலயங்களை திறந்து வைத்து, ஆன்மீக விதிகளை மீறி, ஆலயவழிபாடுகளை மேற்கொள்ளும் மனிதர்களை கண்டு மனம் நொந்ததனால் தனது கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது "சாயி மகராஜ் குருவை தேடி"

இம்மாதிரியான ஆங்கில புத்தாண்டு கொண்டாட்டங்கள் இப்போது கோவில்களை தாண்டி சீவசமாதிகளை தொட்டிருக்கிறது. இது நன்மைக்கல்ல, நமக்கு நாமே பேராபத்துக்களை தேடிக்கொள்ளும் செயல்.





யோக நித்திரையில் இருக்கும் யோகியரையும், சித்தர்களையும் மகான்களையும், தயவு செய்து சீண்டுதல் வேண்டாம்.



பாபா மதியம் உணவிற்கு பின் சற்று ஓய்வெடுத்துக் கொள்வது வழக்கம். அப்படிபட்ட ஒரு நாளில் பாபாவிற்கு தானமாக அளிகப்பட்ட ஷ்யாம் சுந்தர் என்ற குதிரையை ஓட்டி வந்த கூலிகாகாரன் ஒருவன், மசூதியில் ஒருவரும் இல்லை என நினைத்து. தன்னுடைய கூலியை கொடுக்க வேண்டி சத்தமிட, தன்னுடைய யோகநித்திரையை கலைத்த கோபத்தில் திரைசீலையை விலக்கி கூலிக்காரனை நோக்கி கற்களை வீசினார் பாபா,

கற்கள் பட்டு மண்டை உடைந்ததை சத்சரிதத்தில் படித்திருப்போம். தயவுசெய்து பாபா பக்தர்களாகிய நாம் இச்செயலை செய்ய வேண்டாம் என அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இம்மாதம், சாயி என் வாழ்க்கை உன்னோடு தான் பத்திரிகை வெளியீட்டு விழாவில் திரு. சாயி வரதராஜன் அவர்களை எதிர்பாராது சந்தித்தேன். அவரிடம் நமது புத்தகத்தை கொடுத்து ஆசி வாங்கினோம்.

உடல்நலம் பாராது நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். சற்குரு சாயி நாதர் அவருக்கு நல்ல ஆரோக்கியமான உடல் நலத்தை அளித்து இன்னும் பல்லாண்டு காலம் எங்களை வழி நடத்தி செல்ல வேண்டும் என பாபாவிடம் பிரார்த்திக்கிறேன்.



மீண்டும் அடுத்த பதிவில் சந்திப்போம்.

அன்புடன் ஆசிரியர்

வாழ்க வளமுடன்!

வாழ்க வையகம்!

பாபாவின் உடைமைகள்

நம்மில் சிலர் இரண்டு நாள் சீரடி யாத்திரை செல்வதற்கு, தம் மிடம் இருப்பதிலேயே சிறந்த பகட்டான உடைகளையும்,தங்க ஆபரணங்களையும், அலங்காரப் பொருட்களையும் இரண்டு மூன்று பைகளில் எடுத்து வருவார்கள்.ஏன் எனில் தன்னுடைய பொருட்களின் மீது உள்ள பற்று,தன் உடல் மீது உள்ள பற்று, நாம் ஆடம்பரமாக அலங்காரம் செய்து கொண்டு பார்க்கப் போகின்றோமே, பாபாவின் உடைமைகள் என்ன, என்று பார்ப்போமா?

பாழடைந்த மசூதியே அவரது அரண்மனை. பிச்சைகாரர்களே அவரது தர்பாரை சேர்ந்தவர்கள். துனியில் உள்ள திருநீறே அவரது செல்வம். நீளமான கைகளை உடைய கிழிந்த மேல் சட்டையே அவரது மரியாதைக்குரிய உடை. தம்மிடம் எப்போதும் வைத்திருக்கும் செங்கல்லே தலையணை.

கரடுமுரடான ஒரு தடியே அவ ரது செங்கோல் தலையை சுற்றி கட்டி யிருக்கும் துணியே அவரது கிரீடம். நாள்தோறும் ஐந்து வீடு களில் இருந்து அவர் பிச்சை எடுத்த உணவும்,அவரது களிமண் புகைகுழாய் மட்டுமே அவரது சொத்துக்கள். அவற்றை போன்றே இன்னும் சில பொருட்கள் அவருக்கு கிடைத்தது. அவற்றை அவர் எப்படி பெற்றார் என்பது மிகவும் சுவையான செய்தியாகும்.

ஆரம்பத்தில் பாபாவிடம் ஒரு கப்னி மட்டுமே இருந்தது. அது மிகவும் பழையதாகவும் பல இடங் களில் கிழித்ததாகவும் இருந்தது. பகல்வேலைகளில் அவரே கிழிசலை தைத்து அணிவார். எப்போதாவது ஒரு முறை தன் கப்னியை தானே துவைத்து துனியில் காய வைத்து அணிவார்.

சில பக்தர்கள் துணிவுடன் வேறு புதிய கப்னியை அணியும்படி கூறுவார்கள். அதெல்லாம் "செவிடன் காதில் ஊதிய சங்கு" போல நடந்து கொள்வார்.அவரிடம் சற்று உரிமையோடு நடந்து கொள்ளும் தாத் யா, ஏற்கனவே கிழிந்திருக்கும் கப்னியை மேலும் நன்றாக கிழித்து விடுவார்.

இறுதியில் பாபா வேறு கப்னியை அணிவார். மூன்று அல்லது நான்கு மாதங்களுக்கு ஒரு முறை தனது கப்னியை மாற்றிக்கொண்டு பழைய கப்னியை அக்னிக்கு அளித்து விடுவார். எப்போதாவது ஒரு முறை தம் ஞாபகார் தமாக வைத்துக்கொள்ளும்படி ஏதாவது ஒரு பக்தருக்கு கொடுத்து விடுவார்.

பாபா நாள் தோறும் குளிக்க மாட்டார். சில சந்தர்ப்பங்களில் ஒரு நாளில் இரண்டு முறை கூட குளிப்பார். பாபா குளிக்கும் போது

உபயோகப்படுத்துவதற்கு ஒரு பக்தர் கல்லால் ஆன ஆசனம் ஒன்றை வைத் தார். ஆனால் பாபா அதை உபயோகிக் கவே இல்லை. தரையில் அமர்ந்து குளிப்பது தான் அவரது வழக்கம்.

இந்தக் கல்லை இன்றும் மசூதியில் நாம் காணலாம். ஆரம்பத் தில் பாபா ஒரு செங்கல்லை தலைய ணையாக வும்,சாக்குத்துணியை படுக்கையாகவும் உபயோகித்து வந்தார். கல்லின்மேல் கைகளை வைத்த வாறே அவர் உறங்குவார்.

பாபா ஒரு கல்லின்மேல் அமர்ந் திருப்பதாக படத்தில் காண்கிறோம் இக் கல்லை முதலில், மாதவ் பாஸ்லே, அப்துல் பாபா முதலிய பக்தர்கள் தமது துணி களை துவைப்பதற்காக பயன்படுத்தி வந்தனர். ஒரு முறை பாபா அதன் மேல் அமர்ந்தார்.

அதிலிருந்து அதில் துவைப்பதை நிறுத்தி விட்டனர். அந்தக் கல்லின்மேல் பாபா அமர்ந்து இருப்பதை போன்று புகைப்படம் ஒன்று எடுக்கப்பட்டது. அதிலிருந்து அந்தக் கல் பூஜைக்குரிய பொருளாகி விட்டது. ஒருமுறை சீரடி யில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டது. மக்கள் அதைப் பற்றி பாபாவிடம் முறையிட்டனர். பாபா ஒரு குறிப்பிட்ட இடத்தை சுட்டிக்காட்டி அங்கே கிணறு தோண்டும் படியும்,கண்டிப்பாக தண்ணீர் கிடைக்கும் என்றும் கூற, சகுண்மேரு நாயக்,காக்கா தீட்சித்,பூட்டி முதலியவர்களின் உதவியுடன் கிணறு தோண்டப்பட்டது.

பாபா கூறியதைப் போன்று, நிறைய தண்ணீர் கிடைத்தது. இன்று அக்கிணற்றை புனிதமாகக் கருதி அதன் நீரை புனித தீர்த்தமாகப் பரு குகின்றனர். இவ்வாறு எளியோருக்கும் எளியோனாய் பாபா வாழ்ந்து வந் தார். சாயியை பணிவோம்! சகல நன்மைகளையும் பெறுவோம்!

தன் இறுதிக்காலத்தில் நடப்பதற்கு மிகவும் சிரமப்பட்டார். அப்போது பாபாவின் நெருங்கிய பக்தர்கள் அவர் அமர்ந்து செல்ல பல்லக்கு ஒன்றை செய்து அளித்தனர். வேறு சில பக்தர்கள் தள்ளுவண்டி ஒன்றையும் வழங்கினர். ஆயினும் பாபா தன் கடைசி காலம் வரை அவைகளை உபயோகிக்கவில்லை. தான் இறக்கும் காலம் வரை நடந்தே சென்றார். ◆



100% இயற்கையாக தயாரிக்கப்பட்ட சாய் ராஜயோகாவின் தயாரிப்புகள்



- ஆறுவகை பூக்களால் தயாரிக்கப்பட்ட ஹெர்பல் டீ
- 25 மூலிகைகளுடன் ஹேர் ஆயில்
- சீயக்காய் ஹேர் வாஷ் பவுடர்
- வேலம்பட்டை பற்பொடி
- வயிற்று நோய் தீர்க்கும் சுண்டவற்றல் பொடி
- அனைத்து நோய்களுக்கும் அமிர்த சூரணம்
- தோல் நோய் தீர்க்கும் குப்பைமேனி தைலம்
- 12 மூலிகைகளுடன் நிலவேம்பு குடிநீர்
- Snow சூப்பர்வாஷ் டிட்டெர்ஜெண்ட் லிக்விட்
- ஹேண்ட் மேக்கிங் குளியல் சோப்

மொத்தமாகவும், சில்லரையாகவும் வாங்க தொடர்பு கொள்ளவும்.

சாய் ராஜயோகா இயற்கை நலவாழ்வு மையம்

17/7 A, Palaniyappa 1st St, 1st Floor, Ayyanavaram, Chennai-23

9941816692, 8825831068

தொடர் –9:

குருவைத் தேடி

என் பதினான்கு வயதில் தத்துவ ஞானி வேதாத்திரி மகரிஷி அவர்களின் பேச்சு எனக்கு புரியவில்லை. எனவே அப்போது அவரின் அருமையும் எனக்கு தெரியவில்லை.

14 வயதில் நான் வேலைக்கு சேர்ந்த தும் என் சகாக்களும், செய்கைகளும் சற்று மாறுபட ஆரம்பித்தது. ரத்த வேகத்தால், அனுபவ உலகிற்கு எது சரி எனப்பட்டதோ அது எனக்கு தவறாகப்பட்டது.எது தவறு எனப்பட்டதோ அது சரி எனப்பட்டது.

வயது வேகத்தில் கண்ணில் கண்ட புத்தகங்களை எல்லாம் படிக்க ஆரம்பித்தேன்.அதை அரசபுரசலாய் கவனித்த என் மூத்த சகோதரன் , என்னிடம் இரண்டு புத்தகங்களுடன் வந்து, நீ புத்தகங்கள் படிப்பதில் ஆர்வம் காட்டுகிறாய் நல்லது, இதோ இந்த புத்தகத்தையும் படி என்று என்னிடம் கொடுத்தார்.

ஒன்று சுவாமி விவேகானந்தர் அவர்கள் எழுதிய வீர இளைஞருக்கு என்ற புத்தகம் மற்றொன்று வேதாத்திரி மகரிஷி அவர்கள் எழுதிய மனவளக்கலை. திரு. வேதாத்திரி மகரிஷியுடன் இது மூன்றாவது சந்திப்பு. சுவாமி விவேகானந்தருடன் இதுவே எனது முதல் சந்திப்பு. இரண்டுமே அப்போது என் புத்திக்கு ஏறவில்லை.

சிறிய வயதில் எனது ஆசைகளும், தேவைகளும்,குறுகிய வட்டத் திற்குள்ளேயே இருந்தன.ஆகையால் என்னிடம் கடவுளுக்கு அதிக வேலை இல்லை. அதிகபட்ச வேலை என்னவென்றால் சினிமா.

அதற்குத்தான் கடவுளை நினைப் பேன். சினிமா பார்பதற்கு காசு வேண்டும். டிக்கெட்கிடைக்கணும். அப்படியே டிக்கெட் கிடைத்து உள்ளே போறதுக்குள்ளே படம் போட்டுவிட்டு கூடாது.

இடைவேளை விட்டு மூன்று ரீல்கள் ஓடியபின்பு மெல்ல வீட்டு பயம் வரும். உடனே கடவுளே, நான் சினிமா பார்த்தது என் வீட்டிற்கு தெரியக் கூடாது. தியேட்டரில் தெரிந்தவர்கள் யாரும் என்னை பார்த்து விடக்கூடாது. இதுவே எனது வேண்டுதலாக இருக்கும் இதைத்தாண்டி அந்த வயதில் என்னிடம் கடவுளுக்கு வேலை இல்லை.

மெல்ல ,மெல்ல ,என் ஆசைகளும், பழக்க வழக்கங்களும் விரிவடைய, விரிவடைய, எனக்கு உண்டான கடவுள் தேவையும் அதிகரிக்க தொடங்கியது. முருகனிடம் வேண்டுவேன் வேண்டியது கிடைக்க வில்லை என்றால், இருக்கின்றார் விநாயகர்.

அவரும் தரவில்லை என்றால் இருக்கவே இருக்கின்றார் ஏசப்பா, சித்தப்பா, பெரியப்பா, என்று மாற்றி மாற்றி முயற்சி செய்ய வேண்டியது தான்.

எப்படியோ, நான் மாறமாட்டேன்.

கடவுள்தான் மாறவேண்டும். இங்கு கடவுளுக்கு பஞ்சமா என்ன? ஒருவர் செய்யவில்லை என்றால் இன்னொருவர் செய்து விட்டு போகிறார்.

அப்போதும் மாறியது மனம் தான் என்பது ஏனோ புரிய மறுக்கும்.

அப்படி எவருமே செய்யவில்லை எனில், அப்போது தான் என் கடவுள் நம்பிக்கையின் காரணமாக ,என் கடவுளர்களின் மேல் எனக்கு ஆதங்கமும், கோபமும் வரும். பிறகு புத்தி ஏனோ அறிய மறுக்கிறது. ஆயினும் ஒரு நாள் தெரிந்து தானே ஆகவேண்டும். அது தானே அவனின் லீலை.

பல்வேறு பிறவிகள் எடுத்திழைத்து இறுதியில் மனித பிறவி எடுத்து இருப்பதற்கு காரணமே வந்தவேலையை உணர்ந்து கொள்ளவதற்குத்தான்.

எங்கிருந்து புறப்பட்டதோ அங்கேயே சென்று சேரவேண்டும் என்பதே வந்த வேலை.அந்த பூர்வ சென்ம



தான் கடவுள் மேல் பொய் கோபம் கொண்டு கடவுளை போலவே நடித்துக் கொண்டு இருக்கும் புல்லுருவிகளான சாமியார்களையும், சோதிடர்களையும், அருள் வாக்கு கூறுபவர்களையும் நம்ப ஆரம்பிக்கின்றோம்.

இவர்களுக்கும், நமக்கும் கடவுள் ஒருவரே என்பதையும், நமக்கெல்லாம் மேலானவர் கடவுள் என்பதையையும் வாசம் இம் மானுடப் பிறப்பிற்கு புரிய வரும் வரை அது வந்த வேலையை விட்டுவிட்டு சொந்த வேலையைதான் பார்க்கும். இது அய்ம்பூதங்களால் ஆன ஊனுடம்பின் இயற்கை. இதுவே இளம்பிராயத்தில் தவறுகளாக வெளிப்பட்டு பின்பு அனுபவ ஞானமாக மாறுகின்றன.

குறிப்பிட்ட ஒரு சிலரை தவிர

இங்கே யாரும் மகானாக பிறப் பதில்லை. உருவாக்கப் படுகிறார்கள்.

ஒன்பதாம் வகுப்போடு பள்ளிக்கு முழுக்கு போட்டு விட்டு வேலைக்குச் சேர்ந்து விட்டேன்.காலை எட்டு மணிக்கு எல்லாம் விற்பனைக்கு கவுண்டரில் நிற்கும் போது, தலை சீவி,திருநீறு பூசி பணிவோடு நிற்க வேண்டும்.

திருடக்கூடாது, பொய் சொல்லக் கூடாது, வாடிக்கையாளரிடம் கோபப் படக்கூடாது இதையே ஒரு நாள் கூட தவறாது கடை திறக்கும்போது எங்களிடம் கிளிப்பிள்ளையைப் போல் கூறுவார் எங்கள் முதலாளி திரு.புக்ராஜ் அவர்கள். அவரிடம் நான் வேலைக்கு சேர்ந்த போது எனக்கு வயது 14.அந்த வயதில் அவர் எனக்கு எதிரியாகத்தான் தெரிந்தார்.

ஒவ்வொரு நாளும் கடைக்குச் சென்று வருவது ஏதோ செயிலுக்கு சென்று வருவது போல் இருக்கும். கடுமையான வேலை வேறு உடலையும், மனதையும் புண்படுத்தும். எங்காவது சென்று விடுவோமா என்று தோன்றும்.

வீட்டின் வறுமை என்னை பண்படுத்தும். மாதச் சம்பளம் என் வீட்டிற்கு பெரிதும் உதவியாக இருந்தது. எனவே பல்லைக் கடித்துக் கொண்டு வேலை செய்து வந்தேன்.

அப்போது தான் எனக்கு கடவுள் மீது நம்பிக்கை இல்லாமல் போனது.

- (தொடரும்..)

சாய் ராஜயோகாவின் தயாரிப்பு



அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.

குப்பைமேனித் தைலம்




அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொரி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.

தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:

சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்

99418 16692, 88258 31068.

ஸ்ரீமத் சதானந்த சுவாமிகள்



உலக மக்களின் அறியாமை என்னும் இருளை அகற்றவும், அறிவு ஒளி பெருக்கி, ஆன்ம ஒளி நல்கவும், தஞ்சை தரணியிலே அவதரித்து திருவிடைமருதூர் மௌன சுவாமிகளின் சீடராகி உலக மக்களின் துன்பம் நீக்க தன் குருவின் வழியில் பிரம தத்துவமாய் ஒளிரும் சத் குரு பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீமத் சதானந்த பிரம்ம குரு தேவதத் சுவாமிகள் சிவ வடிவாய் பக்தர்களுக்கு அருள் புரிய வேண்டி சென்னை, ஆலப்பாக்கம், சதானந்தபுரம் ஞான பூமியில் எழுந்தருளியுள்ளார்.

சுவாமிகளின் 97 வது மகா குருபூஜை 23.1.19 புதன் கிழமை பக்தர்களின் ஒத்துழைப்போடு வெகு விமரிசையாக நடைபெற்றது.

சீவசமாதி அமைந்திருக்கும் வளாகம் முழுவதும் வண்ண விளக்குகளாலும், மலர்களாலும், அலங்கரித்து, ஆன்மீக சொற்பொழிவு,இசை,நடனம்,நாட்டியம், அன்னதானம் என சிறப்பாக நடைபெற்ற குருபூஜையில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு குரு அருளை பெற்று மகிழ்ந்தனர்.

குரு வாழ்க! குருவே துணை!





சீரடி புனித யாத்திரை பகுதி-2



சென்ற மாதம் 17.1.19அன்று ஸ்ரீ சாய்ராம் ஆத்மஞான சபை யின் சார்பாக 46 பேர் கொண்ட குழுவினர் மதியம் 12.20க்கு மும்பை எக்ஸ்பிரஸ்சில் புறப்பட்டோம். முடிந்தவரைதங்கநகைகளையும், பகட்டானஆடைகளையும் தவிர்த்து யாத்திரையில் கலந்து கொள்ளுமாறு ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபையின் சார்பாக வேண்டுகோள்விடுத்திருந்தார் எங்கள் குருநாதர்.அதன் படி நடந்துகொண்ட அனைவருக்கும் எங்களது நன்றிகள்.

அதற்கு முன்பாக, குரோம்பேட்டை செல்வி அவர்களுக்கு காலில் அடிபட்டு வீங்கிவிட்டது. அவருடைய அண்ணா சுந்தரவடிவேலு விற்கும் அப்படியே, திரு. ராஜா அவர்கள் பணம் கிடைக்கவில்லை, ஆகவே நான் வருவது சந்தேகம்தான் என்றார். சகோதரர் ஸ்ரீதர் அவர்களின் உறவினர் ஒருவர் மிகவும் உடல் நலமில்லாமல் இருந்தார்.இப்படியாக ஒவ்வொருவருக்கும் ஒரு பிரச்சனை.

அனைத்திற்கும் எங்கள் குருநாதர் ஒரே பதிலைத்தான்



கூறினார். 18 ந்தேதி நாம் பாபாவை தரிசிக்க, பாபாவே நம்மை வரசொல்லிவிட்டார். எனவே இந்த பிரச்சனை குறித்து நாம் கவலைப்பட வேண்டியதில்லை.நாம் 46 பேரும் பாபாவை பார்க்கப் புறப்படுகிறோம்.

அதில் மாற்றம் இல்லை என்று கூறி விட்டார்.சொன்னது போலவே 17.1.19 வியாழன் மதியம் அனைவரும் மத்திய ரயில் நிலையம் வந்தடைந்து ,அனைவரும் சற்குரு சாயிநாதனை வேண்டி பிராத்தணை செய்து கொண்டு ஆனந்தத்துடன் புறப்பட்டோம்

மறுநாள் காலை 8 மணிக்கு டவுண்ட் இரயில் நிலையம் வந்த டைந்து அங்கிருந்து பேரூந்து மூலம் 12 மணிக்கு சீரடியில் நாங்கள் தங்கும் விடுதியான சாய் ஆஸ்ரமத்திற்கு வந்தடைந்தோம். சொந்த மண்ணில் இருப்பது போல் மனம் ஆனந்தமாக இருந்தது.

அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட அறைகளுக்குச் சென்று சிரமப் பரிகாரம் செய்து கொண்டு பாபாவை தரிசிக்கப் புறப்பட்டோம். புதிதாக வந்திருக்கும் பக்தர்கள் யாரும் இடம், மொழி கண்டு பயப்படவேண்டாம்.

இது நமது தந்தையின் ஊர் என்று குழுவினர் அனைவரையும் தன்னுடன் அழைத்து சென்று மாலை 4 மணிக்கு தரிசனம் செய்ய வைத்தார். எங்கள் குருநாதர். மாலை 4மணியில் இருந்து சமாதி கோவிலுக்குள் இருக்கும் குருஸ்தான், பாபாவின் அனுக்கத் தொண்டர்களின் சமாதிகள், அருங் காட்சியகம், லெண்டித் தோட்டம், பாராயண ஹால், நந்தா தீபம், தத்தாத்ரேயா சன்னதி, முக தரிசனம், சிவன், விநாயகர், சனி, ஆஞ்சநேயர் சன்னதிகளை தரிசித்து அறைக்கு திரும்பினோம்.

இதில் என்ன அதிசயம் என்றால், நாங்கள் அனைவரும் பாபாவை தரிசித்து விட்டு குருஸ்தான் அருகே அமர்ந்து, எங்கள் குரு பாபாவின் மகிமைகளை கூறிக் கொண்டு இருக்க, ஒரு சிறுவனும் ஒரு பெரியவரும்,எங்கள் அனைவ ருக்கும் கைகள் நிறைய பூந்தியும், அவலும், அளித்து நாங்கள் போதும் என்று சொல்லும் வரை கொடுத்துச் சென்றார்கள்.



இரவு அறைக்கு சென்று ஓய்வு எடுத்து கொண்டோம்.மறுநாள் காலையில் 5 மணிக்கு முக தரி சனத்திற்கு எதிரில், தியானம் செய் வதற்கு ஏற்பாடு செய்திருந்தார் எங்கள் குருநாதர். அனைவரும் கலந்து கொண்டோம். தியானம் ஆரம்பித்தவுடன் ஒரு பைரவர் வந்து எங்கள் குருநாதரின் அருகே அமர்ந்து கொண்டது.

சுமார் முப்பது நிமிடங்கள் தவம் முடித்து கண்களை திறந்தபோது பைரவர் எங்கள் குருநாதரின் மடியில் தலைவைத்துப் படுத்திருந்தது. அவரும் அதை கலைக்காமல் சத்சங்கம் நிகழ்த்தினார்.சத் சங்கம் முடியவும் பைரவரும் துயிலெழுந்து புறப்பட்டார்.

அவருக்கு எங்கள் குருநாதர் பிஸ்கெட் சாப்பிட கொடுத்து அனுப்பி வைத்தார். சீரடிக்கு செல்லும் போதெல்லாம் இந்த அறிய காட்சி நடக்க தவறுவதே இல்லை. நாங்களும் அதை ஆனந்தமாக கண்டு களிப்போம்.

இம்முறையும் அப்படியே, அடுத்த படியாக அனைவருக்கும் தேவையான பொருட்களை சளைக் காமல் தனித்தனியாக வாங்கிக் கொடுத்தபின்பு, அனைவரையும் பிரசாதாலயா அழைத்து சென்று அன்னதானம் அருந்த வைத்தார் குருநாதர். மாலை கந்தோபா ஆலயம், லட்சுமிபாய் சமாதி, மகல்சாபதி சமாதி ஆகியவற்றை தரிசனம் செய்து தங்கும் அறைக்கு திரும்பினோம்.

மறுநாள் காலை எட்டு மணிக்கு புறப்பட்டு ஔரங்காபாத் சென்று சயன நிலையில் இருக்கும் ஆஞ் சநேயர், கிரிஷ்னேஷ்வர்சோதிர்லிங்கம், எல்லோரா குகை கோவிலான கைலாசநாதர் ஆலயம் ஆகியவற்றை கண்டு இரவு சீரடி திரும்பினோம்.

மறுநாள் காலை 5மணிக்கு நாங்கள் தங்கியிருந்த சாய் ஆஸ்ரமத்தில் தியானம் செய்ய ஏற்பாடு செய்திருந் தார் எங்கள் குருநாதர். அதிகாலை குளிரில் வெட்ட வெளியில் தியானம் செய்தது புதிய அனுபவமாக இருந்தது.

தவம் முடித்து அனைவரும் குருவிடம் ஆசி வாங்கினோம்.காலை 11 மணிக்கு அறையை காலிசெய்து விட்டு பேருந்தில் ஏறி சகோரி சென்று





உபாசினி மகராஜ் சமாதியை தரிசித்து, பின்பு சனிசிங்னாப்பூர் தரிசனம் முடித்து இரவு 9 மணிக்கு புனே இரயில் நிலையம் வந்தடைந்தோம்.

அங்கிருந்து இரவு 12 மணிக்கு மும்பை எக்ஸ்பிரசில் புறப்பட்டு மறுநாள் இரவு 8மணிக்கு அனைவரும் சென்னை திரும்பினோம்.

பத்திரமாக அழைத்துச் சென்று தரிசனம் காட்டிஅருளி எங்களை ரட்சித்தருளிய, சற்குரு சாயி பாபா விற்கும், எங்களின் வாழ்வியல் வழி காட்டி குரு. ஸ்ரீராம் அவர்களுக்கும் நன்றி.

– ஜெயந்தி ஸ்ரீராம்

விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன

அன்பான சாயி சொந்தங்களே...உங்களது நிறுவனங்கள், கடைகள், தொடர்பான விளம்பரங்களை பிரசுரித்து பயனடையலாம்.



முழுபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.2000

அரைபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.1000

முன் பின் அட்டை உள்பக்கம் கலர் ரூ.3000

பின் அட்டை கலர் ரூ.4000

எப்போது என்னிடம் வரப்போகிறாய்...

சகுண்மேரு நாயக் என்பவர், தமக்கு பன்னிரெண்டு வயதாகும் போது கோவாவில் வாழ்ந்து வந்தார். சகுண்மேரு தன் சிறுவயதில் மாடுகளை மேய்ப்பதற்காக ஓட்டிச் செல்லுவது வழக்கம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் அவர் சாது ஒருவரை கண்டார் அவர் சகுண்மேருவை தன் அருகில் வரும்படி அழைத்தார்.

பையனோ பயந்து போய் வீட்டிற்கு ஓடி வந்து தன் தாயிடம் நடந்ததை கூறினான். பக்தி மிகுந்த அந்த தாய், எல்லா சாதுக்களையும் இறைவனின் உருவமாகவே பார்ப்பவள்.

அவள் தன் மகனுடன் சாது இருந்த இடத்தை தேடிச்சென்று, அவருக்கு பயறும், அதை சமைக்க விறகும் கொடுத்தாள் அவற்றை பெற்றுக்கொண்ட அவர் சகுண்மேருவை நோக்கி விளையாட்டாக, எப்போது வரப்போகிறாய்? என்று கேட்டார். சகுண்மேரு பதில் அளிக்கவில்லை. சாது புன்னகை புரிந்துவிட்டு போய்விட்டார்.

ஆறு ஆண்டுகளுக்குப்பின் சகுண்மேரு, வியாபாரம் செய்வதற்காக பெல்காமுக்கு வந்து அங்கேயே ஏழு ஆண்டுகள் வாழ்ந்தார். தத்தாத் ரேயரின் பக்தரான தத்தோபந்த் என்பவர் அவருக்கு நண்பராகி சகுண்மேருவை ஆன்மீக வழிக்கு இழுக்க ஆரம்பித்தார்.

சிறிது காலத்திற்கு பிறகு புகழ்பெற்ற தத்தரின் தலமாகிய நரஸோபாவாடிக்கு யாத்திரை செல்ல விரும்பினார் சகுண்மேரு. அங்கே அவர் தத்தாத்ரேயரின் பக்தரும், பெரும் மகானுமாகிய ஸ்ரீ தேம்பே சுவாமிகளை தரிசிக்கும் பேறு பெற்றார். சகுண்மேருவை பார்த்த அம்மகான் " நீ ஒரு பெரும் தர்பாரை சேர்ந்தவன்.

சொல்வதற்கு வேறு என்ன இருக்கிறது"? என்றார். சகுண்மேருவுக்கு இச்சொற்களின் பொருள் அப்போது புரியவில்லை. மூன்று ஆண்டுகளுக்கு பின் சகுண்மேரு ஹைதராபாத்துக்கு சென்றார். அங்கு சாயி பாபாவின் பக்தரான சேட் ஒருவரிடம் அறிமுகமானார். ஒரு முறை அவர் தம்முடன் சகுண்மேருவை 1912 ஆம் ஆண்டு சீரடிக்கு அழைத்து சென்றார்.

வழக்கம் போல பாபா லெண்டிக்குப் போய்விட்டு மசூதிக்கு திரும்பிக் கொண்டிருந்த போது அவர்களைச் சந்தித்தார். ஊர்வலம் போல ஒரு கூட்டம் அவருடன் நடந்து வந்து கொண்டிருந்தது. சகுண்மேருவை பார்த்த பாபா, கன்னடத்தில் " எங்கிருந்து வந்திருக் கின்றாய்? உனக்கு என்ன வேண்டும்"? என்று கேட்டார்.



சகுண்மேருவுக்கு பதில் சொல்ல முடியவில்லை. அவ ருக்கு அவசரமாக ஹைதராபாத் திரும்பவேண்டியது இருந்ததால் அவர் வீடு திரும்ப பாபாவிடம் அனுமதி கேட்டார். பாபா பதில் அளிக்காததால், அவர் அங்கேயே தங்கவேண்டியதாயிற்று.

ஐந்தாவது நாள் பாபா அவரிடம்," நான் உன்னுடைய இடத்திற்கு வந்தது உனக்கு நினைவிருப்பதாய் தெரியவில்லை. அப்போது நீ மிகவும் சிறியவனாக இருந்தாய் குளத்திற்கருகே மாடுகளை ஓட்டி வந்த போது உன்னைக் கண்டேன். உனது தாயார் எனக்கு பயிறும், விறகும் கொடுத்தாள். இப்போது நினைவு வருகிறதா?" என்றார்.

பதினான்கு ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது, தெளிவாக சகுண்மேருவுக்கு நினைவிற்கு வந்தது.பாபாவின் மேல் நம்பிக்கையும், அன்பும் ஊற்றெடுக்க அவரை கண் இமைக்காது பார்த் தவாறே அமர்ந்திருந்தார். பாபா புன்னகை புரிந்து விட்டு, "ஏன் பித்த னைப் போல என்னை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டே இருக்கிறாய் நமது பெற்றோர்கள் இங்கிருக்கின்றனர்.

எனவே நாம் இங்கேதான் தங்க வேண்டும். நீ என்னை கவனித்துக் கொள், நான் உன்னை கவனித்துக் கொள்கிறேன்". என்றார். அதிலிருந்து சகுண்மேரு, சீரடியிலேயே உணவு விடுதி ஒன்றை நடத்திக்கொண்டு தங்கி விட்டார். அவருக்கு வேறு எதுவும் தேவை இருக்கவில்லை.

அப்போது தான், ஏன் தேம்பேஸ் வாமி தன்னை ஒரு பெரும் தர்பாரை சேர்ந்தவன் என்று கூறி னார் என்ப தையும், பதினான்கு ஆண்டு களுக்கு முன் அந்த சாது, "நீ எப்போது என் னிடம் வரப்போகிறாய்?" என்று கேட்ட தன் பொருளையும் சகுண்மேரு உணர்ந்தார்.

சாயியை பணிவோம்! சகல நன்மைகளையும் பெறுவோம்! ◆

பீட்ரூட்டின் நிறம், மணம், குணம், என எல்லாமே அதை ருசிக்க தூண்டுபவை. செக்கச் சிவந்த அதன் நிறத்தைப் பார்த்து "பீட்ரூட் சாப்பிட்டால் ரத்தம் ஊறும்" என்கிற அளவிற்கு மட்டுமே தெரிந்து வைத்திருப்போருக்கு பீட்ரூட்டின் அறியப்படாத பக்கங்களை அறிந்து சாப்பிட வைக்கும் இந்த தகவல்கள்!

பீட்ரூட் ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் ஐரோப்பா ஆகிய நாடுகளில் இயற்கையாக வளர்ந்து வரும் பண்டைய காயாகும்.அந்த காலத்தில் பீட்ரூட்டின் கீரையை மட்டுமே சாப்பிட்டார்கள், இக் காலத்தில் பீட்ரூட் பல முறைகளில் சமைத்து உண்ணப்படுகிறது. ஜூஸாகவும் அருந்தப்படுகிறது.

பீட்ரூட் பல காலங்களாக மருத்துவ நோக்கத்துக்காக பயன்படுத்தப்படுகிறது. முக்கியமாக கல்லீரல் பிரச்சனைகாக உபயோகப்படுத்தப்படுகிறது. இதன் சிகப்பு நிறம் மற்றும் இனிப்புச் சுவையினால் சிறுவர் முதல் பெரியவர் வரை அனைவரும் விரும்பி சாப்பிடுவார்கள்.

பீட்ரூட்டை சாலட், சூப்,ஊறுகாய், பொரியல்,கூட்டு மற்றும் குழம்புகளில் சேர்த்து கொள்ளலாம். பீட்ரூட்டின் கீரையை மற்ற கீரைகளை சமைப்பது போல சமைத்து உண்ணலாம்.

பீட்ரூட் இதயத்திற்கு நன்மை செய்யும் காய், இதில் உள்ள தனிப்பட்ட நிறமி ஆன்ட்டி ஆக்ஸிடன்டுகள் இதய நோய்க்கு பாதுகாப்பு அளிக்கிறது. இது உடலில் உள்ள கொழுப்பின் அளவை குறைக்கும். அதோடு வயதான தோற்றம் அடையும் தன்மையை குறைக்கும் திறன் கொண்டது.

பீட்ரூட்டில் அதிகமான சர்க்கரை



அளவு இருந்தாலும், இதை நீங்கள் வாரத்திற்கு 2அல்லது 3 தடவை உண்ணலாம்.பீட்ரூட் ஜூஸ் குடித்த சில மணி நேரங்களில், அது அதிக ரத்த அழுத்தத்தை குறைக்கும். ஒரு கிளாஸ் பீட்ரூட் ஜூஸ் ரத்த அழுத்தத்தை 45 புள்ளிகள் குறைக்கும் திறன் கொண்டது. மாரடைப்பு வரும் ஆபத்தை குறைக்கிறது.

இதில் உள்ள நைட்ரேட்,நைட்ரிக் ஆக்ஸைடு என்ற வாயுவை உற்பத்தி செய்கிறது. அந்த வாயு ரத்த நாளங்களை விரியசெய்து ரத்த ஓட்டத்தை அதிகரிக்கச் செய்து ரத்த அழுத்தத்தை குறைக்கிறது.

பீட்ரூட்டில் பீட்டசயனின் என்னும் நிறமி உள்ளது.இவை உயிரணுக்களின் சேதத்தை தவிர்த்து, அலர்ஜியை தடுத்து உடல் உறுப்புகளை பாதுகாக்கும் செயல் திறனை அதிகரிக்கிறது பீட்ரூட்டின் வைட்டமின் சி நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும். நார் சத்து மாங்கனீஸ், எலும்புகள்,சிறுநீரகம், கல்லீரல் ஆகியவற்றிற்கு மிகவும் சிறந்தது. பொட்டாசியம் முதுகுதண்டு வளர்ச்சிக்கு நல்லது.

ரத்த சோகையை நீக்கவல்லது. கர்ப்ப காலத்தின் சோர்வை நீக்கும். இதில் உள்ள நார் சத்து கொழுப்பை குறைக்கும். குடல் இயக்கங்களை அதிகப்படுத்தி மலச்சிகலை நீக்கும். வெள்ளை அனுக்களை பெருக்கி தொற்று நோய்களை தடுக்கும்.

பீட்ரூட்டில் சக்தி வாய்ந்த ஊட்டச்சத்துகள் நிறைய உள்ளன. அவை புற்று நோயை தடுக்க உதவுகிறது. ஆய்வுகளில் பீட்ரூட்டில் உள்ள பீட்டானின் என்ற நிறமி புற்றுநோய் எதிர்ப்பு பண்புகளை கொண்டுள்ளது என்று கண்டுபிடித்துள்ளார்கள்.

எனவே பீட்ரூட்டை தினமும் எந்த வகையிலாவது உணவில் சேர்த்து கொண்டு நோய்களை தவிர்த்து வாழ்வோம். ◆

ஓம் சாய்ராம்

சாயி இடம் விற்பனைக்கு


(ஆவடி) ஆரிக்கன்பேடு, மெயின் ரோட்டில் பேருந்து நிறுத்தம் அருகில் 2000 சதுர அடி காலிமனை விற்பனைக்கு உள்ளது. சுவையான குடிநீர் வசதி, சுற்றிலும் குடியிருப்பு உள்ளன. உடனடியாக வீடு கட்டி குடியேறலாம்.

தொடர்பிற்கு:

6382771587

தொடர்: 9

மவுனம்



ஞானிகளின் சேர்க்கை நல்லது, அது மவுனத்தில் வேலை செய்யும். மவுனமே மிகவும் ஆற்றல் படைத்தது.தான் செய்கிறேன் என்ற எண்ணம் இருக்கும் வரை செயலின் பயனை,அது நல்லதோ,கெட்டதோ, அதை அனுபவித்தே ஆகவேண்டும்.

நாம் எண்ணிய கருத்தை,அல்லது ஆசைப்படும் பொருட்களை பற்றிய கருத்துக்களை வெளியிட வேண்டிய காலத்தில் மனதை கட்டுபடுத்தி அதை வெளியிடாமல் இருந்தால் அந்த கருத்திற்கு ஒரு சக்தி வருகிறது.

நாம் நமதுகருத்தையோ,ஆசையையோ, வெளியிட்டு பெறும் பலனைவிட, வெளியிடாமல் இருக்கும் போது கிடைக்கும் பலன் அதிகமானது.அச்சக்தியே மனதின் சக்தியாகும்.

மவுனமாக நாம் இருக்கும் போது சக்தியுடன் வெளிப்படுவது எண்ணத்தின் திறனாகும்.இதுவே மவுனத்தின் மாபெரும் சக்தியாகும். நம் மனத்தின் எண்ணங்களை திறம்பட பேசினால் சிறப்பான பலன்

கிடைக்கும் நேரங்களும் உண்டு. திறமை அதிகமானால் ,பலனும் அதிகமாகும். ஏதாவது ஒரு சமயத் தில் திறமை பலனற்றுப் போகும்.

எவராலும் எதுவும் செய்ய முடியாது போகும். அப்பொழுது மனித திறமை செயல் பட முடியாது. தெய்வம் செயல்பட வேண்டும். அத்தகைய சூழலில் மவுனமான மனமே சிறந்த கருவி யாகும். மனித திறமைக்கு ஒரு எல்லையுண்டு,

அது பயன்படாத போது அந் நேரங்களில் மனம் இயற் கையாக வே மவுனத்தில் வேலை செய்யும். அதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். நம்மை மீறிய சந்தர்ப்பங்களில் நம் மன தை அடக்கி மவுனமாக இருந்தால் எல்லாம் சிறப் பாக நடைபெறும்.

நான் என்ற எண்ணம் கொண்ட வர்கள் மவுனத் தில் கடைபிடிப்பது அரிது. அது யாருக்கு முடிகிறதோ அவர்களுக்கு வாழ்க்கையில் யோகத்திறன் ஏற்பட்டு விடுகிறது. இதற்கு பெரிய மனிதர்களிடம் போக வேண்டாம் .

நமக்கு தெரிந்த சாதா ரண நபர்கள் சிலருக்கு இந்த குணம் இயற் கையா கவே இருக்கும். அப்படி பட்ட நபர்களிடம் மற்றவர் கள், நீ பாட்டுக்கு தலையை ஆட்டுறே அவுங்க எல்லாத் துக்கும் சரி என்கிறார்கள். "இது உன் ராசி" என்று சொல்வதைக் கேட்கலாம். இன் னும் சில பொறுமைசாலிகளைப் பார்க்கலாம். நானாக எதையும் தேடிப்போக மாட்டேன். தானாக வருவது வரட்டும் என்பார்கள். அவர்களைத் தேடி எல்லாம் வரும்.

கேட்டாலே ஒழிய கிடைக்காது என்ற சந்தர்பங்கள் உள்ளன.அப் பொழுதும் கேட்காமல் மவுனமாக இருந்தால் உன் தேவை எப்படித்



தெரியும்? தெய்வம் கூட மனிதன் கேட்கட்டும் என்று தானே இருக் கிறது. மாறாக, கேட்பதால் காரியம் கெட்டு போனால், கேட்டே கெடுத் தோம் என்பது போன்ற நேர மும் உண்டு அல்லவா? இந்த வித்தியா சத்தை எப்படி புரிந்து கொள்வது?



உங்களுடைய உரிமையும் தேவையும் நியாயமானது. ஆனால் மற்றவர்களுக்கு தெரியாது எனும் பொழுது கேட்பது சரியானது. பெண் ணுக்கு மாப்பிள்ளை தேடி போக வேண்டியது அவசியம். அப் போது நான் மவுனத்தில் இருக்கப் போகிறேன் என்று சொல்ல முடியாது. அன்றாட வாழ்க்கையில் நாம் மவுனத் தின் விளைவுகளை எல்லா இடங் களிலும் பார்க்கலாம்.

மவுனத்திற்கு உள்ள சக்தியை நாம் அறிந்து கொள்ள வேண்டும். சுருக்கமாக புரிந்து கொள்ள வேண் டும் என்றால்,ஒருவரிடம் நாம் ஒரு விசயமாக பேசவேண்டும் என்றால் நாம் நம் கருத்துக்களை விளக்கி கூறுவதை விட கூறாமல் இருக்கப் பழகிக்கொண்டால்,

மவுனத்தின் சக்தி செயல் படு வதை காணலாம். நான்கு பேர் சந் தித்துப் பேசும் பொழுது ஒவ் வொரு வரும் தமது கருத்துக்களை தெரி விக்க ஆர்வமாய் முயல்வதை காண லாம். நாம் அங்கிருந்தால் நமக்கும் அது போன்ற ஆர்வம் இருப்பதை உணரலாம். அந்த ஆர்வத்தை கட்டுப்படுத்தி மவுனமாக இருந்தால் அந்த மவுனத்தின் மூலம் நம் எண்ணம் செயல்படும் என்பதே திண்ணம்.

மவுனத்தில் சக்தி மிகப் பெரி யது. மனதில் உள்ளதை கட்டுப் படுத்துவது ஒரு வகை மவுனம். எல்லா தகுதிகளும் இருந்தும், எதை யும் கனவிலும் கருதாமலி ருப்பது உயர்ந்த மவுனம். இவ் வகையான மவுனம் இருக்கு மிடத்தில் தான் பிரார்த்தனைகளும் பலிதமாகும். எனவே மவுனம் என்னும் ஆயுதம் ஏந்தி மகத்தான காரியம் பலவும் புரிவோம்.

– (தொடரும்...)

P.Sivasaravanan B.E.,
98434 40806

Authorised Distributor
GS Caltex

ELITE ENTERPRISES
(Automobile & Industrial Lubricants)

Authorised Dealer
Castrol



Products

- Automobile Engione Oils
- Hydraulic Oils
- Gear Oils
- Compressor Oils
- Cutting Oils
- Greases-Industrial
- Greases-Automobile
- Brake Oil
- Coolant Oil

SF:610, Shop-D,
Sri Lakshmi Complex,
Thoppampatti Pirivu,
MTP Road, Coimbatore - 641 017.
Email: sivasaravanan@gmail.com

பக்தி

– பானுமதி

என் என்பெயர் பானுமதி,சொந்த ஊர் தஞ்சை, தற்போது சென்னையில் வசிக்கின்றேன். நான் குழந்தையாக இருந்ததில் இருந்தே சாய் பக்தை. மிகவும் ஆச்சாரமான குடும்பம் தாய்,தந்தை, என்னை மிகவும் பாசத்தோடும் கண்டிப்போடும் வளர்த் தார்கள். எனக்கு ஒரு தம்பி இருவரும் ஒழுக்கத்துடன் வளர்ந்தோம். கல்வி முடித்து நகரின் பிரதான கல்வி நிலையத்தில் ஆசிரியையாக பணிக்கு சேர்ந்தேன்.

கல்லூரியில் என்னுடன் படித்த வன் கணேஷ் அவனும் பாபாவின் பக்தன் என்பதால் நான் அவனுடன் சகஜமாக பழகியது பின்னாளில் வினையாகிவிட்டது.நான் கல்வி முடித்து ஆசிரியர் பணிக்கு சேர்ந்து மூன்று வருடங்களாகியும், அவன் என் பின்னால் சுற்றி வந்தது என் வீட்டிற்கு தெரிந்து பெரிய பிரச்சனையாகி விட்டது. ஒரேநாளில் எங்கள் வீடு தலைகீழாக மாறிவிட்டது.

பள்ளிக்கு என் தந்தையே என்னை அழைத்துச் சென்று விட்டு விட்டு திரும்ப அழைத்துச் சென்றார். எல்லோருக்கும் என்ன தெரியுமோ, தெரியாதோ, அனைவரும் என்னை சந்தேகக்கண்களால் பார்த்தனர். நான் அவனிடம் நட்பாகத்தான் பழகினேன் என்பதை எவரும் ஏற்கவில்லை. என் மனம் மிகவும் துன்பப்பட்டு வாழ் வே சூன்யமாகிப் போனது போல் இருந் தது. எல்லாம் தெரிந்தும் அப்பா என் னை ஒரு வார்த்தை கூட கேட்கவில்லை.

எப்போது கேட்பாரோ,எப்படி கேட்பாரோ, என்று பயந்து, பயந்து வாழ்கையே நகரமாக மாறியது.மனம் முழுவதும் ரணமாக பள் ளிக்கு சென்று பாடம் எடுத்து கொண்டு இருந்தேன். இதற்கிடையில் எனது வகுப்பில் படிக்கும் நந் தாவின்தாயும், நானும் நல்ல சிநேகிதிகள்.நாங்கள் இருவரும் பாபாவின் பக்தைகள் என்பதால் எல்லா செய்திகளையும் பகிர்ந்து கொள்வோம்.

ஒரு வாரமாய் மனம் சரியில்லாத காரணத்தை நந்தாவின் தாயிடம் பகிர்ந்து கொண்டேன். கணேஷ், என் அப்பாவிடம் போய் பேசப்போவதாக வும் அதற்கு நான் சம்மதம் தெரிவிக்க வேண்டும் எனவும், இல்லை என்றால் தற்கொலை செய்து கொள்வேன் என்று மிரட்டுகிறான். எங்கள் அப்பாவிற்கு தெரிந்து விட்டால் அப்புறம் நான் உயிரோடு இருக்க மாட்டேன் என்று கூறி அழுதேன். நந்தாவின் தாய், வருத்தப்படாதே! உன்னை ஒரு வரிடம் அழைத்து போகிறேன். அவர் உன் பிரச்சனைகளுக்கு தீர்வு கூறு



வீலாமிர்தம்

வார், என்று என்னை அழைத்துச் சென்றார். அன்றுதான் என் குரு திரு. ஸ்ரீராம் அவர்களை முதல் முறையாக சந்தித்தேன்.

என் பிரச்சினை அனைத்தையும் அவரிடம் கொட்டினேன். என்னிடம் அரைமணிநேரம் பேசினார், நான் பாபா வின் பக்தையாக இருந்தாலும் கூட அன்றுதான் நான் பாபாவை முழு மையாக சரணாகதி அடைந்தேன். எல்லா பிரச்சனைகளையும் பாபாவிடம் விட்டுச்செல் பாபா பார்த்துக்கொள்வார் நாளை காலையே எல்லாம் மாறும் என்றார்.

என் குரு கூறியபடியே, அங்கேயே, அப்படியே அப்போதே என் பிரச்சினை களை பாபாவிடம் விட்டு விட்டு மனம் நிம்மதியுடன் வந்தேன். என்குரு கூறியது போலவே மறுநாள் காலையிலேயே என் முன்னால் இருந்த மிகப்பெரிய பிரச்சனைகள் அனைத்தும் என்னை விட்டு விலகின.

என்குரு எனக்கு யோகா, தியானம்



கற்றுத் தந்தார்கள் மனம் அமைதியாக இருந்தது அதே வருடத்தில் எனக்கு திருமணமும் நடந்தேறியது. இரண்டு வருடங்கள் ஆகியும் எங்களுக்கு குழந்தை இல்லாமல் இருந்தது. பார்க்காத மருத்துவம் இல்லை.

அனைவரும் குழந்தைக்கு வாய்ப் பில்லை என்று கூறி விட்டார்கள். என் குருவிடம் முறையிட்டோம்.கண்டிப்பாக உனக்கு குழந்தை உண்டு, என்று எனக்கும்,என் கணவருக்கும்,யோகா கற்றுத் தந்தார்.அதைத் தொடர்ந்து இரண்டு மாதங்கள் செய்து வந்தோம். இப்போது பாபாவின் ஆசியாலும், அருளாலும் எங்களுக்கு இரு பெண் குழந்தைகள் உள்ளனர்.

பிரசவ நேரத்தில் கூட பாபா அதிசயம் நிகழ்த்தினார். என் குடும்பத் தினர் அனைவரும் சிசேரியன் செய்வ தற்கு அனைத்து ஏற்பாடுகளும் செய்தி ருந்தனர். மருத்துவர்களும் சிசேரியன் தான் என்றே நாள் குறித்திருந்தனர். குறிப்பிட்ட நாளன்று மருத்துவர்கள் வருவதற்கு முன்பே எனக்கு சுகப்பிரச வம் நடந்துவிட்டது.

என்வாழ்கையில் வந்த சிக்கல்களை தீர்த்து, எனக்கு ஒரு நல்ல வாழ்க்கை யை அமைத்துக்கொடுத்த சற்குரு சாயி பாபா விற்கும்,பாபாவை பற்றி எனக்கு தெளிவு படுத்திய என் குரு திரு. ஸ்ரீராம் அவர்களுக்கும் என் பணிவான நன்றியை காணிக்கையாக்குகிறேன். ஓம் சாய்ராம்.

தொடர்: 9

வந்தார் சாயி...

– ஸ்ரீராம்

முன்கதை: (குரு வெங்கூசாவின் மறைவிற்குப் பின் தனது 16 வது வயதில் சீரடிக்கு வந்த பாபு சீரடி கிராமத்திலேயே தீவிரமாக தவமியற்றினான். அவனது தவத்தில் வியந்துபோன பய்ஜாவும் அவளது கணவரும் அவனுக்கு பணிவிடை செய்தனர்.)

ஔரங்காபாத் மாவட்டத்தில் தூப் எனும் கிராமத்தில் வசித்து வந்தவர் சாந்த் பட்டீல். மிகப்பெரிய செல்வந்தர். கிராம நிர்வாக அதிகாரியும் கூட, ஊர்க்காரர்கள் அனைவராலும் மதிக்கப்படும் பெரியமனிதர்.சாந்த்பட்டீல் வியாபார விஷயமாக ஔரங்காபாத் புறப்பட்டுக் கொண்டிருந்தார்.

பயணத்திற்கு அவர் எப்போதும் பயன்படுத்தும் செல்லக் குதிரை குஜிலியை தயார் செய்து கொண்டே அவரின் அன்பு மனைவி கமீலா,ஏங்க உங்களைத்தானே, என்று அழைத்தாள். சொல்லுமா, என்றார் சாந்த் பட்டீல். ஔரங்காபாத்தானே செல்கிறீர்கள், ஆமாம், அப்படியே தவுலத் வீட்டிற்கு சென்று தம்பியின் நிஹ்கா சம்பந்தமா பேசிவாருங்களேன்,என்றாள் கமீலா. ஓ... அதுக்கென்ன பேஷா பேசிடலாம். என்ற படி தன்செல்ல குதிரைக்கு சேனங்களை பூட்டினார் பட்டீல். வியாபாரங்களை முடித்து ஊர் திரும்ப எப்படியும் ஒரு மாதமாவது ஆகும். தன் அன்பு மனை வியிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டார்.

பல சிற்றூர்களில் வியாபாரத் தை முடித்துக்கொண்டு ஔரங் காபாத்தை நோக்கி சென்று கொண்டி ருந்தார். பட்டீல் நல்ல வெயில், தனக்கும்,குதிரைக்கும் சற்று ஓய்வு தேவைப்படுவதால் சற்று ஓய்வெடுத்து புறப்படலாம் என முடிவு செய்து ஒரு மர நிழலில் ஒதுக்கினார். குதிரையின் சேனங்களை அவிழ்த்து விட்டு புற்களை மேய்ந்து ஆசுவாசப்படட்டும் என்று சுதந்திரமாக மேயவிட்டார்.



இந்த குதிரையை ஆறு மாத குட்டியிலிருந்தே வளர்ந்து வருகிறார் பட்டீல், இவர் மேல் குதிரைக்கு நிறைய பாசம். தன் எஜமானரை விட்டு எங்கேயும் செல்லாது. பட்டீ லுக்கும்,குதிரை மேல் அபார அன்பு, நம்பிக்கை, குதிரை நன்றாக பழகி இருந்தது. அதனால் அதன் மேல் இருந்த நம்பிக்கையில், தானும் சற்று ஓய்வெடுத்துக் கொள்ளலாம் என்று சற்றே கண் அயர்ந்தார் பட்டீல்.

ஓய்வே இல்லாமல் பிரயாணம். செய்ததால் ஆழ்ந்து தூங்கலானார். புற்களை கண்ட குதிரை ஆனந்தமாக மேயத் தொடங்கியது பசுமையான புற்களை தேடி,தேடி, நகர்ந்த குதிரை தன் எஜமானரை விட்டு வெகுதூரம் சென்று விட்டது.

கண் விழித்த பட்டீல் தான் வெகு நேரம் உறங்கி விட்டதை உணர்ந்து கொண்டார். வாரி சுருட்டி எழுந்தவர் எங்கே என் குஜிலி, என தேட ஆரம்பித்தார். சுற்றிலும் தேடியும் குதிரையை காணவில்லை. அய்யோ என் பிரியமான குஜிலி காணாமல் போய்விட்டதே, அதை எங்கு போய் தேடுவது. நான் பிரயாணம் செய்ய வேண்டிய தூரம் வேறு அதிகம் இருக்கிறதே.என்றவாறே குதிரையின் சேனங்களை எடுத்து தன் தோளில் போட்டுக் கொண்டு நடக்கலானார்.

எதிரில் தென்படும் மனிதர்களிடம் தன் குதிரையின் அடையாளங்களை கூறி குதிரையை பார்த்தீர்களா, என்று விசாரித்துக் கொண்டே தேடினார். நாட் கள் ஓடியதே ஒழிய குதிரை கிடைக் கவில்லை. தன்னுடைய பிரியமான குதிரை கிடைக்காமல் தான் ஊர் திரும்புவதில்லை.

என்று மனதில் உறுதி ஏற்றுக் கொண்டு தேடி, தேடி அலைந்து அலுத்துப் போனார். ஒருவாறு இனித் தேடி பயனில்லை என்ற எண் ணத்தில் மிகவும் சோர்ந்து போய் ஒரு ஆலமரத்தின் அடியில் சோகமாக வந்தமர்ந்தார். அப்போது திடீரென்று ஒரு குரல், என்ன, சாந்த் பட்டீல் ஏன் இவ்வளவு சோகம் என அவரின் பெயரைச் சொல்லி அழைத்தது .

இந்த நடு காட்டில் நம் பெயரைச் சொல்லி யார் அழைக்கிறார்கள் என்று வியந்த பட்டீல், மெல்ல நிமிர்ந்து பார்த்தார், அங்கே தனக்கு எதிரில் அன்பே வடிவாய் அமர்ந்திருந்தார் ஒரு பக்கிரி. உடனே அவருக்கு வணக்கம் கூறி அவரருகில் வந்து அமர்ந்து, என் பெயர் தாங்களுக்கு எப்படித் தெரியும் என்று வினவினார்.

அதற்கு அந்த பக்கிரி, எனக்கு உங்கள் குதிரை காணாமல் போனது கூட தெரியும் என்றார். அப்படி என்றால் காணாமல் போன என் குதிரை இப்போது எங்கே இருக்கிறது தெரியுமா?

என்றார் பட்டீல், ஓ... நன்றாக தெரியுமே, அதோ அந்த ஓடைக்கு அப்பால் மேய்ந்து கொண்டிருக்கின்றது என்றார் பக்கிரி. இப் போது தான் நான் அங்கே பார்த்துவிட்டு வருகிறேன். அங்கு இல்லையே, என்ற பட்டீலைப் தீர்க்கமாய் பார்த்து "இப்போது சென்று தேடு,கிடைக்கும்" என்றார் பக்கிரி.



மறுப்பேதும் கூறாமல் உடனடியாக பக்கிரி சொன்ன இடத்திற்கு விரைந்து சென்றார். சென்றவர் வியப்பின் உச்சிக்கே சென்றார். ஒரு மாதமாக தேடி அலைந்தும் கிடைக்காத அவரின் குதிரை, ஓடை அருகே அமைதியாக நின்று கொண்டிருந்தது.

ஓடிச்சென்று கட்டிப்பிடித்துக் கொண்டார். என் குஜிலி கிடைத்து விட்டது என்று ஆனந்தக்கண்ணீரோடு குதிரையை அழைத்துத்துக்கொண்டு பக்கிரியை நோக்கி சென்றார். குதிரை கிடைத்து விட்டதா,நான் கூறும் போது நீ நம்பவில்லை அல்லவா? என்றார் பக்கிரி. பக்கிரி சாதாரண ஆள் இல்லை என்பதை உணர்ந்தார் பட்டீல். என்னை மன்னிக்க வேண்டும் மகராஜ், நான் ஒரு முட்டாள்.

உங்களை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. என்னை மன்னித்து எனக்கு விடை கொடுங்கள், நான் என் வீட்டில் இருந்து பிரிந்து வந்து வெகு நாட்கள் ஆகிவிட்டது. நான் வீட்டுக்கு செல்ல வேண்டும், என்றார்.

போகலாம், போகலாம், என்ன அவசரம், சற்று நேரம் அமைதியாக இரு, என்னிடம் புகைகுழாய் இருக்கிறது. நாம் இருவரும் சேர்ந்து சிறிது புகைபிடித்துவிட்டு பிறகு செல்லலாம் என்று புகை குழாயை எடுத்து பட்டீலிடம் கொடுத்து சிலிமை தயார் செய் என்றார்.

பட்டீல்லும், சிலிம்மில் புகையிலையை திணித்த வாறே நெருப்பு வேண்டுமே என்றார். உடனே பக்கீர் தன் கையிலிருந்த தடியால் பூமியில் ஒரு தட்டுதட்ட பூமியில் இருந்து நெருப்பு பீறிட்டு வெளிவந்தது, வேறு என்ன வேண்டும் என்றார் பக்கிரி, சிறிது நீர்வேண்டும் என்றவுடன், மீண்டும் தடியால் பூமியில் தட்ட அங்கே பீறிட்டு வெளிவந்தது நீர்.

ஆச்சரியமான இந்த நிகழ்வுகளை கண்ட பட்டீல், பக்கிரி சாதாரண ஆள் இல்லை. இவர் பெரிய அவுலியா வாகத்தான் இருக்க வேண்டும் என்று அவருக்கு அடிபணிந்தார். இருவரும் சிறிது நேரம் புகை பிடித்தவுடன், சரி, நீங்கள் புறப்படலாம் என்றார் பக்கிரி.

அதற்கு பட்டீல், இல்லை அய்யா, குதிரை இல்லாமல் வீட்டிற்கு போகமாட்டேன் என்று எப்படி முடிவெடுத்தேனோ அதுபோல நீங்கள் வராமல் நான் வீட்டிற்கு செல்வதில்லை என்ற முடிவோடு இருக்கிறேன்.

தயவுசெய்து தாங்கள் எங்கள் ஊருக்கு வர வேண்டும் நான் பெற்ற நன்மையை போல எங்கள் ஊரும், ஊரில் உள்ள அனைவரும் உங்களால் நலம் பெற வேண்டும். தயை கூர்ந்து அருள் புரியுங்கள்.என்று மண்டியிட்டார். பக்கிரி அவரின் கைகளை பிடித்து தூக்கி, அல்லாவின் ஆணை அதுவானால் அப்படியே ஆகட்டும். என்று இருவரும் தூப் கிராமத்தை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள்.

– (தொடரும்...)

தியானம் செய்வீர்

பொதுவாக நமக்கு அபாயம் வரும் போது இரண்டு காரியங்களை செய்ய மனம் கட்டளையிடும். ஒன்று அங்கிருந்து ஓடிவிடு. இரண்டு எதிர்த்து போராடு. இதை ஆங்கிலத்தில் ஃபைட் ஆர் ஃப்ளைட் ரெஸ்பான்ஸ் என்பார்கள்.

இந்த இரண்டு கட்டளைகளில் எது மனதை ஆக்கிரமித்து இருந்தாலும் கோர்ட்டிஸால் என்கிற டென்சன் ஹார்மோனை உடல் முழுவதும் பரவச் செய்கின்றது. ஆனால் மனதை ஒருமுகப் படுத்தி தியானம் செய்யும் போது இந்த ஃபைட் ஆர் ஃப்ளைட் விசயங்கள் காணாமல் போய் ஹார்மோனை இயல்பாய் இரு என்று அதட்டி அமர வைக்கின்றதாம்.

இதை நியூயார்க்கிலுள்ள கொலம்பியா பிரஸ்பைட்ரியன் மெடிக்கல் சென்டரின் இயக்குனர் டாக்டர் மெஹ்மெட் ஓஸ் என்பவர் 2000 ஆம் ஆண்டு கண்டு பிடித்திருக்கிறார். அவர் ஒரு அறுவை சிகிச்சை நிபுணர், அவரிடம் வரும் இதய நோய்க்காரர்களை அறுவை சிகிச்சை மூலம் குணப்படுத்துகிறார். மிகவும் சிக்கலான கருவிகளை கொண்டு அறுவை சிகிச்சைகள் செய்து பிறகு மருந்து மாத்திரைகள் மூலம் மேலும் குணப்படுத்துகின்றேன்.

இவை மேற் கத்திய மருத்துவ முறைகள். ஆனால் நான் இவற்றை நம்புவது பேலவே இன்னொரு விசயத்தையும் நம்புகிறேன். அது கிழக்காசிய நாடுகளில் பல நூற்றாண்டுகளாக இருந்து வரும் நடைமுறை அது தியானம். அறுவை சிகிச்சைக்கு முன்பும், பின்பும் நோயாளிகளுக்கு நான் சிபாரிசு செய்வது தியானத்தைத்தான் என்கிறார்.

இதய அறுவை சிகிச்சைக்காக வரும் நோயாளிகளுக்கு 1.30 மணி நேரம் ஓடக்கூடிய சி.டி ஒன்றைக் கொடுக்கிறார்கள். அதில் மெல்லிய விநோதமான நியூ ஏஜ் இசைப் பின்னணியில் ஓம் என்ற மந்திர ஓசை ஒலிக்கின்றது.

உங்களுக்கு மிகவும் பிடித்த பாதுகாப்பாக உணரும் இடத்தில் நீங்கள் இருப்பது போல் கண்களை மூடிக் கொண்டு கற்பனை செய்யுங்கள் என்கிறது சி.டி. குரல். அதன் பிறகு நோயாளி சி.டியும் கற்பனையுமாக நேரத்தை செலவிட வேண்டும். இது ஒரு வித நம்பிக்கையையும் தைரியத் தையும் கொடுப்பதாக டாக்டர்கள் கண்டறிந்திருக்கிறார்கள்.

பல அமெரிக்கர்களுக்கு இது புது அனுபவம். இதயத்தை திறந்து பார்க்கப் போகிறார்கள். வாழ்வா, சாவா என்று வருபர்களிடம் சிடி கொடுத்து தியானம் செய்யுங்கள் என்றால் கொஞ்சம் சிரமம் தான். ஆனாலும் அந்த பயமே தியானத்தை பயிற்சி செய்ய வைக்கிறதாம். ஒரு முறை முயற்சித்து விட்டால் அவர்களுக்கு பிடித்துப் போய் விடுகிறதாம்.

மரணப் போராட்டத்தில் இருந்து மீளவே அவர்கள் தியானத்தை கற்கிறார்கள். நாம் மரணத்தை புரிந்து கொண்டு அதை வெல்லவே பன்னெடுங்காலமாக தியானம் பயின்று வந்தோம். ஆயினும் தற்போதோ, ஆசனமும் தவமும் ஆர்வத்துடன் தான் கற்கின்றார்கள். ஆனால் அந்தோ பரிதாபம் சோம்பேறித்தனம் அவர்களை தொடர் பயிற்சி எடுக்க விடாமல் தடையாய் நிற்கிறது.

எழுமின்! விழுமின்!

எழுந்து நில் விழித்துக் கொள், லட்சியத்தை அடையும் வரை ஓயாது உழை. ஆதலால் தியானம் செய்வோம். ◆



மகான் ஸ்ரீ ராகவேந்திரர்

இந்தியா எண்ணற்ற மகான்களை தோற்றுவித்துள்ளது.அவர்களது வாழ்க்கைச் சரிதத்தைப் பலரும் திரும்பத்திரும்ப எழுதியுள்ளனர். இத்தகைய புனித மகான்களின் சரிதம் பக்கங்களை நிரப்புவதற்காக வீணாக எழுதப்பட்டவை அன்று, மாறாக அத்தகைய மகான்கள் புகட்டிய உயரிய கருத்துக்களை இலட்சியமாகக் கொண்டு வாழ வேண்டும் என்று மக்களுக்கு விடுக்கப்படும் அறைகூவல்கள் ஆகும்.

அவர்கள் பட்ட உடல் கஷ்டங்கள், மற்றும் அவர்கள் பெற்ற அற்புத சித்துக்கள் மக்களின் மனதில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி அவர்களை நல்வழியில் திருப்புவதில் அதிசயதக்க ஆற்றலை பெற்று விளங்குகின்றது. இத்தகைய மகான்களில் ஒருவரே 17ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஸ்ரீ ராகவேந்திரர். தென்னிந்தியாவில் புவன கிரியில் வாழ்ந்த திம்மண்ணப்பட்டருக்கு கடைசி மகனாக பிறந்தவர் தான் ராகவேந்திர தீர்த்தர்.

இவரது இயற்பெயர் வேங்கடபட்டர். இவர் அவரது மூத்த சகோத ரரின் பாதுகாப்பில் இருந்தார்.அவரது ஏழாவது வயதில் அவருக்கு உபநயனம் செய்து வைக்கப்பட்டது சமக்கிருதம் கற்பதற்காக அவர் மதுரைக்கு அனுப்பபட்டார்.பாடங்களைக் கற்பதில் அவருக்கு அபாரமான ஆற்றல் இருந்தது. ஆழ்ந்த புலமை பெற்ற அவர் பல மொழிகளில் பாண்டித்தியம் பெற்று விளங்கினார்.

வேதாந்தத்தில் புலமை பெற வேண்டும் என்ற நோக்கில் தெளிந்த குருவை தேடிய வேங்கடபட்டர் கும்பகோணத்தைச் சேர்ந்த புகழ் பெற்ற சுசீந்திர தீர்தரை அனுகினார். தமது குருவின் பாதங்களில் விழுந்து வணங்கிய வேங்கடபட்டரை குரு அன்புடன் வரவேற்கிறார்.

வேங்கடபட்டரிடம் காணப்பட்ட அசாதாரணமான குணங்களையும், திறமைகளையும் கண்டு அதிசயித்த அந்த இலட்சியகுரு அத்தகைய ஒரு சீடரை தம்மிடம் அனுப்பியதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்தினார். ஏனெனில் பிற்காலத்தில் அந்த சீடர் ஒரு மாபெரும் ஆச்சார்ய புருசராக திகழ்வார் என்பதை அவர் உணர்ந்தார்.

குருவின் மனதை பெரிதும் கவர்ந்த வேங்கடபட்டரை பற்றி சகசீடர்கள் அவர் நேரத்தை வீணாக்குகிறார்,பாடங்களை படிபதில்லை என்று குருவிடம் புகார் செய்தார்கள்.ஒரு நாள் நள்ளிரவு, குருவிற்கு உறக்கம் வாய்க்கவில்லை.

நீண்ட நேரம் தியானத்தில் இருந்த அவர், பின் மெல்ல எழுந்து நடக்கலானார். அப்படியே சீடர்கள் தங்கியிருந்த அறைக்கு வந்தவர், எல்லோரும் குறட்டை விட்டு தூங்கி கொண்டிருப்பதை கண்டார். அங்கே வேங்கடநாதனை மட்டும் காண வில்லை. உறங்காமல் எங்கே



சென்றான் இந்த பிள்ளை? தேடியவாறே வந்தவர், மடத்தின் ஒதுக்குப்புறமான ஒரு இடத்தில் கையில் எழுதிய ஓலை சுவடிகளோடு கண் அயர்ந்து உறங்கும் வேங்கடநாதனை கண்டார்.

அவர் உள்ளம் நெகிழ்ந்து, வேங்க டநாதனின் உறக்கம் கெட்டுவிடாமல் கையில் இருந்த ஓலைச் சுவடிகளை எடுத்து அகல்விளக்கின் வெளிச்சத்தில் படித்தார், என்ன ஆச்சரியம்! விளக் கம் கூற முடியாத பல தத்துவ பாடல் களுக்கு அந்த ஓலைசுவடிகளில் குறிப்புகள் எழுதப்பட்டு இருந்தது.

இந்த சிறிய வயதில் எவ்வளவு புத்திசாலித்தனம், சுதீந்திரர் உள்ளம் உருகியது.கனிவோடு வேங்கடநாதனை பார்த்தார். குளிரில் அவன் உடல் வெடவெடத்துக் கொண்டிருந்தது. தாம் போர்த்தியிருந்த காவி வேட்டியை எடுத்து அவனது அபாரமான அறிவை மெச்சி பொன்னாடை போர்துவது போல் போர்த்தினார்.

நிரந்தரமாக காவி வேட்டியை வேங்கட நாதன் அணியப்போவதற்கு ஓர் ஒத்திகை போல் ஆயிற்று. குரு, வேங்கடநாதனை பாராட்டி அவரை பரி மளாச்சார்ய வெங்கண்ண பட்டர் என்று அழைத்தார். மற்றைய சீடர்களும் அவரை புரிந்து கொண்டு மரியாதை கொடுத்தனர். வேங்கடபட்டர், தம் குருவுடன் பல ஊர்களுக்கு சென்று பல ஆலயங்களை தரிசித்தார்.

பல பண்டிதர்களுடன் வாதம் செய் தார். பழைய நூல்களுக்கு பல புதிய தத்துவ விளக்கங்களை எழுதினார். வெளியுலகம் மெல்ல, மெல்ல, அவரின் மகிமையை அறியலாயிற்று.புவனகிரி சென்றபோது அங்குள்ள மக்கள் இவரது சொற்பொழிவுகளை கேட்டு வியந்த னர். இவரின் தகுதியறிந்து இவரை சிறப்பித்தார்கள். இதனிடையே அவரது குடும் பத்தினர் அவரை குறித்து அக்கறை கொண்டனர். வேங்கடநாதனுக்கு சரஸ்வதி என்ற பெண்ணை திருமணம் செய்து வைத்தனர்.

சரஸ்வதி குணக்குன்றாக விளங்கி னாள். இல்வாழ்வில் ஈடுபட்ட தம்பதியி னருக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்தது. லட்சுமி நாராயணன் என குழந்தைக்கு பெயரிட்டனர். இருப்பினும் இல்லற வாழ்வில் வேங்கடநாதனுக்கு நிறைவு கிடைக்க வில்லை. மாபெரும் பண்டி தரான அவருக்கு சரஸ்வதி கடாட்சம் இருந்து அளவிற்கு லட்சுமி கடாட்சம் இருக்கவில்லை.

அவரது பாண்டித்தியத்தை உணர்ந்த அவரிடம் பாடம் கேட்க வந்த சீடர்களை அவரால் ஒதுக்க முடியவில்லை. கல்வியை கற்றுக் கொடுப்பதில் உள்ள ஆனந்தத்தை எப்படி துறக்க இயலும்.அந்த காலத்தில் சீடர்களுக்கு சாப்பாடு போடுவதும் குருவின் பொருப்புத்தான்.

தனக்கே சாப்பாட்டிற்கு வழி யில்லாத போது சீடர்களை எப்படி பராமரிக்க முடி யும். ஆனால் சம்பாத்தி யத்திற்கான வழி தான் புலப்பட வில்லை. அக்காலத்தில் வறுமையின் பிடியில் அகப்பட்டு அவர் அடைந்த கஷ்டங்கள் அளவில்லாதவை. ஒரே வேட்டியை துவைத்து கட்டிக் கொள் வார் வேங்கடநாதன்.

கட்டி இருக்கும் அந்த வேட்டியில் நெசவாளி நூற்ற நூலை விட மனைவி சரஸ்வதி தைத்த தையல் நூல் தான் அதிகம் இருந்தது.பட்டு வேட்டி என்பது அவர் கைகெட்டாத கனவு. கடும் வறு மையிலும் தன்னால் இயன்ற வரை குடும் பத்தை நிர்வகித்து வந்தாள் சரஸ்வதி. ஆயினும் குழந்தை பட்டினி கிடப்பதை எந்த தாயுள்ளம் தாங்கும்.

பேசாமல் கும்பகோணம் சென்று விட்டால் என்ன? அங்கே குரு சுசீந்திர தீர்த்தரை சரணடையலாமே? சரஸ்வதியின் யோசனையை ஏற்றுக் கொண்டு வேங்க டநாதன் தன் வறுமையை ஒழிக்க கும்ப கோணம் புறப்பட்டார். வறுமை காரணமாக தம்மைச் சரணடைய வந்த வேங்கட நாத னைப் பரிவு பொங்க பார்த்தார் சுசீந்திரர்.

கன்று தாய்பசுவை தேடி வருவது போன்று தம்மிடமே அவர் மறுபடியும் புகலிடம் தேடி வந்திருப்பது அவரை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. ஸ்ரீ மடத்தில் கல்வி கற்றுக்கொடுக்க அவரை பணித் தார். குருநாதர். வேங்கடநாதனின் வறுமை அவ்விதம் ஒரு கட்டுக்குள் அடங்கியது. கல்வி போதிக்கும் நேரம் தவிர மற்றைய நேரங்களில் ஆத்ம விசாரத்தில் மூழ்குவார்.

குருவிடம் பாடம் கேட்பார். ஏராளமான நூல்கள் படிப்பார். தவிர மனைவி மகன் மீது மிகுந்த பாசம் அவருக்கு. வாழ்க்கை ஆனந்தமாக சென்று கொண்டிருந்த நிலையில், குரு சுசீந்திரர் நோய்வாய்பட்டார். ஸ்ரீ மடத்திற்கு அடுத்த பீடாதிபதியை நிர்ண யிக்க வேண்டிய காலம் வந்து விட்டது என்பதை அவர் உள் மனம் உணர்ந்து கொண்டது.

யாரை அடுத்த மடாதிபதியாக நியமிப்பது. சன்னியாசம் பெற்றுத் துறவி யாக இந்த மடத்தை வழி நடத்திச் செல்லும் ஞானம் யாருக்கு இருக்கிறது? வேறு யாருக்கு இருக்கிறது வேங்கடநாதனை தவிர, மூலராமரின் எண்ணமே தன் எண்ணம் என்பதை உணர்ந்து கொண்ட குரு வேங்கடநாதனிடம் தன் எண்ணத்தை வெளிப்படுத்தினார்.

வேங்கடநாதன் திகைத்தார், இது எப்படி சாத்தியம். என்னையே நம்பி யிருக்கும் என் மனைவி,குழந்தையை எப்படி கைவிடுவேன். வேங்கடநாதன் கவலையில் ஆழ்ந்தார். சரியான நேரத்தில் வேங்கடநாதனை ஆட்கொள்ள இறைவன் திரு உள்ளம் கொண்டான். ஒரு நாள் நள்ளிரவு வேங்கடநாதன்முன் ஒரு ஒளி உருவம் தோன்றியது.

கையில் வீணையும், கண்ணில் கருணையுமாக சாட்சாத் சரஸ்வதி தேவியேதான். மனைவி சரஸ்வதியை பிரிவது எப்படி என தவித்த வேங்க

டநாதனை அன்னை சரஸ்வதி ஆட் கொண்டாள். மகனே,நீ பிறந்திருப்பது வேறு காரணங்களுக்காக. நீ செய்ய வேண்டிய ஆன்மீக பணிகள் ஏராள மாக காத்திருக்கிறது.

அடியவர்கள் உன்னை தெய்வமாக காண்பதற்கு காத்திருக்கறார்கள். உன் மனதில் ஏன் இந்தசஞ்சலம்? இந்த பிறவியில் இந்த மனைவியையும்,மகனையும், பிரியப் போகிறாயே? கடந்த பிறவிகளில் எத்தனை பேர் உன் மனைவியாக இருந்தார்கள்? எத் தனை பேர் பிள்ளைகளாகப் பிறந்தார்கள்?

அவர்களை எல்லாம் பிரியத்தானே செய்தாய்? நினைத்துப் பார் மகனே! அநித்தியமான இந்த சம்சார சாகரத்தில் மேலும் உழலப் போகிறாயா,இல்லை நித்தியமான இறை நாட்டத்தில் நிலைக்கப் போகிறாயா?

முடிவெடுத்தார் வேங்கடநாதன். குருவிடம் தன் முடிவை சொல்லி சன்யாச தீட்சை வேண்டினார். கி.பி1624 ம்ஆண்டு, ஸ்ரீராக வேந்திர் என்ற புதுப் பெயர்



சூட்டப்பட்டு சன்யாச தீட்சை வழங்கப்பட்டது.

தன் கணவர் துறவியாகிவிட்டதை அறிந்த சரஸ்வதி திக்பிரமை பிடித்தது போல் ஆனாள் இனி தன் கணவரை பார்க்கவும் இயலாது என்பதை அவள் உணர்ந்தாள். இப்படி ஒரு வாழ்க்கை தேவைதானா? உணர்ச்சி மிகுதியால் ஓர் விநாடியில் முடிவெடுத்து கிணற்றில் குதித்து தற்கொலை செய்து கொண்டாள்.இவ்விதம் அவள் வாழ்வு திடீரென முடிந்தது.

மடத்தின் பொறுப்புகளை எல்லாம் ஸ்ரீ ராகவேந்திரரிடம் ஒப்படைத்த சுதீந்திரர் இரண்டே ஆண்டுகளில் ஆனெகுந்தி என்ற இடத்தில் முக்தியடைந்தார். தவமே வாழ்வாக வாழ்ந்து வந்த ஸ்ரீ ராகவேந்திரின் தூயதிருமுகம் பலரை கவர்ந்தது.

ஏராளமான அடியவர்கள் அவரை நோக்கி வரத்தொடங்கினர். ஓயாத மந்திர செபத்தால் ராகவேந்திரருக்கு பலசித்துக்கள் ஏற்பட்டன. அளவற்ற கருணையோடு மக் களின் துயர் துடைப்பதையே நோக்கமாகக் கொண்டு தன் அடியவர்களை காத்து ரட்சித்து வரலானார்.

பல இடங்களுக்கு தீர்த்தயாத்திரை சென்றார். சென்ற இடங்களில் எல்லாம் அற்புதங்கள் விளைந்தன.மக்கள் பக்தி பரவசத்தோடு அவரை வணங்க ஆரம்பித்தனர்.

அவரின் மகிமையை கேள்வி பட்ட சித்திமசூத்கான் என்ற நவாப், அவரின் நம்பகத்தன்மையை பற்றி நேரில் கண்டறிய ஆவல் கொண்டான். ஆட்டு மாமிசத்தை வெள்ளித்தட்டில் வைத்து பட்டுத்துணியால் மூடி அவருக்கு சமர்பித்தான்.

அவன் கண்களில் கண்ட கேலி சிரிப்பை கண்டு தானும் புன்முறுவல்



பூத்தார் சுவாமிகள். அமைதியாக வெள் ளித்தட்டின் மீது தண்ணீர் தெளித்து பட்டுத்துணியை விலக்க உத்தரவிட்டார். துணி விலக்கப்பட்டது.அங்கே மாமிசத்திற்கு பதில் தட்டு முழுவதும் ரோஜா மலர்கள் நிறைந்திருந்தன.நவாப் மனம் நடுங்கியது.

அடடா, உண்மையிலேயே மகானான ஒருவருக்கு அபசாரம் செய்து விட்டேனே,என அவரது இதயம் கலங்கியது.என்ன வேண்டுமானாலும் கேளுங்கள்.என்னை மன்னித்து தயைகாட்டுங்கள் எனப்பணிந் தான் நவாப். துங்கபத்ரா நதிக்கரையில் உள்ள மாஞ்சாலம் என்னும் கிராமம் தனக்கு வேண்டும் என்றார் ராகவேந்திரர்.

தங்கள் சித்தப்படியே ஆகட்டும் என்று மாஞ்சாலம் கிராமத்தை சாசனம் எழுதித் தந்தான் நவாப். தன் இஷ்டதெய்வமான வேங்கடாசல பதிக்கு அங்கே ஓர் ஆலயம் நிர்மாணித்தார். பிறகு அங்கேயே தமக்கு பிருந்தாவனம் அமைக்க கட்டளை இட்டார். அன்பர்கள் பிருந்தாவனம் எழுப்பினர்.

கி.பி.1671 ஓர் வியாழன் அன்று தான் வந்த பணி முடிந்து விட்டதால் இனி பிருந்தாவனத்தில்700ஆண்டுகள் இருந்து தாம் அருள் பாலிக்கப்போவதாக கூறினார். ஸ்ரீராகவேந்திரின் பிருந்தாவனப் பிரவேசம் செய்யப் போகிறார் என்ற தகவல் பரவி நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் அந்த அதிசய காட்சியை காண கூடினர்.

மலர்ந்த முகத்துடன் பிருந்தாவனத் தின் நடுவே யோக முத்திரையில் பத்மாசனமிட்டு அமர்ந்தார் சுவாமிகள். வலதுகரத்தில் துளசி மாலை மட்டும் தொங்கியவாறு இருந்தது. அந்த துளசி மாலை எப்போது கீழே விழுகிறதோ அப்போது பிருந்தாவனத்தை மூடிவிட வேண்டும் என்பது ராகவேந்திரரின் குறிப்பு. தியானத்தில் ஆழ்ந்து சிலை போல் அமர்ந்திருந்த ஸ்ரீராகவேந்திரின் கையில் இருந்த மாலை பூமியில் நழுவியது.

ஜெய் ஸ்ரீ ராகவேந்திரா என்ற கூக்குரல் எங்கும் ஒலித்தது. அன்பர்கள் தாரை தாரையாக கண்ணீர் வடித்தனர். கட்டுகடங்காத சோகத்தில் சிலர் மண் ணில் புரண்டனர்.ஸ்ரீ ராகவேந்திரரின் தலைவரையில் வெங்கண்ணா கற்களைக் கொண்டு மூடினார்.

தலைக்கு மேலே 1200 சாலக்கிராமங் கள் வைத்து பிருந்தாவனம் முழுமையாக நிர்மாணிக்கப்பட்டது. அருட்செல்வத்தை மக்களுக்கு வாரி வாரி வழங்கும் வள்ள லாக இன்றளவும் மந்ராலயத்தில் சீவ சமாதி கொண்டு எழுந்துதருளி வாழ்ந்து வருகின்றார் ஸ்ரீ ராகவேந்திரர். ◆



ஸ்ரீ கஜானன் சாயி பாபா ஆலயத்தில் குடமுழுக்கு 30.12.18 ஞாயிற்றுக்கிழமை வெகு விமரிசையாக நடைபெற்றது. சென்னை கொடுங்கையூர், எழில் நகர், "பி" பிளாக் ஆறாவது தெருவில், ஸ்ரீ கஜானன் சாயி பாபா ஆலயம் என்ற திருநாமம் சூட்டி பாபாவிற்கு கோவில் கட்டி வெகு சிறப்பாக குடமுழுக்கு நடத்தியிக்கின்றனர், திரு. சாய் கௌரி ரமேஷ் ராமச்சந்திரன் தம்பதியினர்.

எங்கெங்கோ இடம் தேடிச்சென்றும் எங்கும் கிடைக்காமல், கடைசியில் தங்களது இல்லத்திற்கு அருகிலேயே பாபாவிற்கு கோவில் அமைத்து இருக்கின்றார்கள். பாபாவின் விக்கிரகம் சேலையூர் திரு. ஜெயச்சந்திரன் அவர்களால் அளிக்கப்பட்டிருக்கின்றது. கோவிலில் சிறப்பம்சமாக விழாவிற்கு வருகை தந்த பக்தர்களுக்கு மட்டுமல்லாது, ஊர் பொதுமக்கள் அனைவருக்கும் பாரபட்சம் பாராது தலைவாழை இலையில் அறுசுவை விருந்து அளிக்கப்பட்டது.

சகோதரி சாய் கௌரி அவர்கள் குடமுழுக்கில் கலந்து கொள்ள வேண்டும் என்று அழைத்திருந்தார். ஆனால் அன்றைய தினம் நமது ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபையில் தியானம் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆகையால் நான் அதை முழுமையாக மறந்துவிட்டேன். மதியம் 2மணிக்கு திரு ஆரணி ரவி அவர்கள் எனக்கு போன் செய்து நீங்கள் வரவில்லையா? என்று கேட்டபோது தான் ஞாபகம் வந்தது.

உடனடியாக நண்பர் திரு. யுக நாதனை அழைத்துக் கொண்டு அடுத்த அரை மணிநேரத்தில் அங்கிருந்தேன். தாமதமாக வந்ததற்காக வருத் தப்படாமல் எங்களுக்கு சிறப்பு விருந்து அளித்து பொன்னாடை அணிவித்து சிறப்பு செய்தார்.

ஆலயம் நிர்மாணித்து முதல் குடமுழுக்கு வரை திரு. சாய் கௌரி ரமேஷ் ராமச்சந்திரன், தம்பதியினரும் அவர்களது குழந்தைகள் டில்லிபாபு, சரண்யா ஆகியோரும்,மாமனார் மாமியார் திரு. அனுசுயா ராமச்சந்திரன் அவர்களும் இணைந்து பணியாற்றி இருக்கின்றார்கள். அவர்கள் அனைவருக்கும் பாபாவின் பரிபூரண ஆசி கிடைக்க பிராத்திக்கின்றோம்.

சித்தர்களின் ஜீவ சமாதி தரிசனம்:



- அயனாவரம்
வெங்கடேசன்
9941782523



பரமஹம்ச ஓம்கார சுவாமிகள்

சித்தர்களின் சீவசமாதி தரிசனத்தில் இந்த மாதம் பரமஹம்ச ஓம்கார சுவாமிகள் சீவசமாதி தரிசனம் காண்போம்.

சென்னையில் மிக முக்கியமான இடமாக கருதக்கூடிய கோடம்பாக்கத்தில், சுவாமியின் சீவசமாதி ஆலயம் உள்ளது. திருத்தணிக்கு மேற்கே பத்துமைல் தொலைவில் உள்ள தும்மல செருவு கண்டிரிகா என்ற கிராமத்தில் 1921ஆம் வரு டம் சூன் மாதம் பத்தாம் நாள் வெங்கடராஜி, அஸ்திசுப்பம்மா தம்பதியினருக்கு இரண்டாவது மகனாக அவதரித்தார். பிறக்கும் போதே குழந்தையின் தலையை சுற்றி ஒளிவட்டம் தெரிந்தது.

அவருக்கு பெற்றோர் செல்வராசு என்று பெயரிட்டு அழைத்தனர்.

சுவாமிகள் கல்வி பயின்று அரசாங்க பணியில் அமர்ந்தார். இரையை தேடுவதோடு, இறையும் தேடு,என்ற பாம்பன் சுவாமிகள் வாக்கிற்கேற்ப சுவாமிகள் பணியில் இருந்தவாறே ஆன்மீகத்திலும் நாட்டம் கொண்டார்.

எங்கோ,எப்போதோ, கேட்ட "ஞானோதயம்" என்ற சொல் அவரை தூங்க விடாமல் செய்தது. விளக்கம் பெற குருவை தேட ,இறைவன் அருளால் அவருக்கு சண்முகானந்தா என்ற குரு கிடைத்தார்.

அவரிடம் மந்திர,மந்திரங்களை கற்றார். பலகலைகளில் தேறினார். இராம நாமத்தை உச்சரித்து வந்த செல்வராசுக்கு அவரது குரு ஓம் என்னும் பிரணவ மந்திரத்தை உபதேசித்தார். அதன் பிறகு ஆன்மீக பயணங்களும், மக்களுக்கு உப



தேசம் செய்வதும் அதிகரிக்க,1949ஆம் ஆண்டு கோடம்பாக்கத்தில் விசயதசமி அன்று ஞானோதயம் என்ற மன்றத்தை ஆரம்பித்தார்.
சுவாமிகள், தமிழ், ஆங்கிலம், இந்தி,சமக்கிருதம், தெலுங்கு, ஆகிய ஐந்து மொழிகளில் புலமை பெற்றவர்.

எனவே தனது ஆன்மீக பயணங்களைக் குறித்தும்,தான் உபதேசித்த கருத்துக்களையும், மேற்கண்ட ஐந்து மொழிகளில் நூலாக எழுதி வெளியிட்டார். சுவாமிகள் தான் சமாதி ஆவதற்கு முன்பே தன்னுடைய சீடர்களுக்கு, ஐந்து நிலையான ஞானம் பெற வேண்டி தன் சமாதியை ஐந்து படிகளுடன் தானே உருவாக்கினார்.

முதல் படி: நமக்கு பூர்வ புண்ணியம் இருந்தால் மட்டுமே பக்தி என்ற முதல் படியை அடையலாம்.

இரண்டாம் படி: நமது மனம் பக்தி என்ற தேடலை எப்போது துவங்குகிறதோ, அப்போது நம்மை சுற்றியுள்ள புற உலக சப்தங்களை மறப்பதற்கு செபம் ஒன்று தேவைப்படுகிறது. அதுவே ஓம் என்னும் பிரணவம்.

மூன்றாவது படி: ஓம் என்னும் மந்திரத்தை உச்சரிப்பதால் நமக்கு கிடைக்கும் பேரின்பம் என்னவென்று சுவாமிகள் தனது பக்தர்களுக்கு நிரூபித்துள்ளார்கள். பக்தியும், செபமும், ஒன்று சேரும்போது நாம் இறைவனுடன் ஒன்றுவதற்கான நிலைக்கு வந்து விடுகிறோம்.

நான்காம் படி: தியான நிலை கைகூடும். **ஐந்தாம் படி:** தியானத்தில் இறுதி நிலையே சமாதி நிலை. இந்த ஐந்தாம் படியில்தான் ஞானம் பெறுகிறோம்.

இவ்வாறு இந்த ஐந்து படிகளை பற்றி தம் பக்தர்களுக்கு உபதேசம் செய்திருக்கிறார் சுவாமிகள். சமாதி நிலையான ஐந்தாம் படியைகடந்து நாம் சோதியை காண்கிறோம்.

அதனை அடுத்து ஓங்காரமே நம்மை வழி நடத்திச் செல்கிறது என்பதை காட்டு வதற்காக ஓம் என்னும் படம் வைக்கப்பட்டிருக்கிறது. சுவாமிகள் சீவ சமாதி அடையும் நாளை மூன்று ஆண்டுகளுக்கு முன்னரே தன் சீடர்களுக்கு தெரிவித்து அதன்படி அரசாங்கத்திடம் முன் அனுமதியும் பெற்றார்.

அவர் சொன்னபடி 1967 ம் ஆண்டு சனவரி 11ம் நாள் அமாவாசை அன்று அதிகாலை மூன்று மணிக்கு தமது பக்தர்களின் முன்னிலையில் பரிபூரணம் அடைந்தார். சுவாமிகளின் உடல் அடக்கம் அவரின் குரு,திரு. சண்முகானந்தா குருஜி அவர் களின் கையால் நடை பெற்றது என்பது சிறப்பாகும்.

சுவாமிகளின் ஞானோதயா ஆலயத்தில் நாம் தவம் இருக்கும் போது மிகுதியான ஈர்ப்பு சக்தி கிடைப்பதை நாம் உணரலாம். அவசியம் ஒரு முறை செல்லுங்கள், சித்தரின் அருளை பெறுங்கள்.

முகவரி: பரமஹம்ச ஓம்கார சுவாமிகள் சீவசமாதி ஆலயம், சாமியார் மடம் (பவர் ஹவுஸ் அருகில்) , டாக்டர் சுப்புராயன் நகர், (முதல் தெரு), கோடம் பாக்கம். **பேருந்து வழிதடம்:** பிராட்வே TO வடபழனி, மாங்காடு,ஐயப்பன் தாங்கல். எண்: 17,17A,17B,17C,17K

இறங்குமிடம்: கோடம்பாக்கம் பவர் ஹவுஸ். **புகைவண்டி வழிதடம்:** சென்னை கடற்கரை TO தாம்பரம்

இறங்குமிடம்: கோடம்பாக்கம்.

◆

பக்த ஜனாபாய்

பக்தர்கள் பலர் பாதம் பதித்து, பக்தி உணர்வை வளர்த்த புனித மண் மராட்டிய மாநிலமாகும்.இங்கு ஸ்ரீ கிருஷ்ணர் பாண்டுரங்கன் என்ற பெயரில் பண்டரிபுரம் என்ற தலத்தில் கோவில் கொண்டு அருள் பாலித்து வருகிறார்.

மராட்டிய மண்ணில் பிறந்து, பண்டரிநாதனின் பக்தியில் திளைத்து, அவனை போற்றி பாமாலைகள் பல புனைந்து தொன்மையான இறைபக்தி பாரம்பரியத்தை தொடர்ந்தவர்தான் பக்த ஜனா பாய். சிறந்த பக்தரும்,கவிஞருமான, ஜனாபாய் மராட்டிய மாநிலத்தில் கங்காகேட் என்ற இடத்தில் 13 ம்நூற்றாண்டில் பிறந்தார்.

மக்களால் தாழ்ந்த குலம் என்று கருதப்பட்ட ஒரு குலத்தில் பிறந்த இவரது வாழ்க்கை, வறுமை, சமுதாயத்தின் ஏச்சுக்கள் நிராகரிப்புக்கள் என்றே துவங்கியது.இருப்பினும் நல்ல பண்புடனும், இறை உணர்வுடன் வளர்க்கப்பட்டார்.

மிகச்சிறுவயதில் தாயை இழந்த அவரை மன ஆறுதலுக்காக பண்டரிபுரம் ஆலயத்திற்கு கூட்டிச்சென்றார் அவரது தந்தை. அந்த பயணம் அவரது வாழ்கையையே மாற்றிப் போட்டது. கோவிலுக்கு வந்த தாம்சேட்டி என்ற அடியவர், சிறுமியின் பண்பாலும், சக்தியாலும் கவரப்பட்ட அவர் அவளை தன் வீட்டிற்கே அழைத்து சென்றார். நல்லதொரு இடத்தில் மகளைச் சேர்த்து விட்ட மன நிறைவோடு அவளது தந்தை காலமானார்.

தாம்சேட்டி ,கணாபாய் தம்பதியினரின் மகன் சிறுவன் நாமத்தேவர், பாண்டுரங்கனின் பரம பக்தனாக விளங்கிய மகான்.அவரை விட சற்றே அதிக வயது கொண்ட சிறுமியாக இருந்தால் ஜனாபாய்.வீட்டு வேலைகள் செய்வதுடன் கூட நாமத்தேவரின் மூத்த சகோதரி என்ற நிலையில் இருந்து அந்த சிறுவனையும்,கவனித்துக் கொள்ளும் பொறுப்பையும் ஏற்றாள்.

கடமைகள் முடிந்ததும் பாண்டுரங்கன் ஆலயம் சென்று அவனை தரிசிப்பது, அவனைப்போற்றிப் பாமாலைகள் இயற்றிப்பாடுவது எனக்கழிந்தது ஜனாபாய்யின் வாழ்க்கை. ஒரு இரவில், வீசிய கடும் புயலாலும்,பெய்த மழையிலும்,நாமதேவர், ஜனாபாய் ஆகியோரின் எளிய வீட்டின் கூரை சரியத் தொடங்கியது.தன் பக்தர்களின் துயரைக்கண்டு இரங்கிய பாண்டுரங்கன், அதனைத் துடைக்க தானே அங்கு ஓடோடி வந்தான். அவனது சுதர்சன சக்கரம் ஒரு குடை போல் இருந்தது. வீட்டிற்குள் மழைநீர் விழாமல் காக்க, தன் பீதாம்பரத்தை தூக்கிப்பிடித்தவாறு ,வீட்டின் கூரையை சரி செய்து, மீண்டும் பொருத்தும் பணியில் ஈடுபட்டான் பகவான்.

வீட்டில் இருப்பவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்க ,இறைவனின் பேரொளி பட்டு எழுந்து கொண்ட ஜனாபாய், பாண்டுரங்கனை தரிசிக்கும் பேறு பெற்று, விவரிக்க முடியாத பெரும் மகிழ்ச்சி அடைந்தாள்.பணியை முடித்த இறைவன், பசியாக இருக்கிறது.

உண்ண ஏதாவது கொடு என்று பக்தையைக் கேட்க,ஆனந்தமாக அவனுக்கு உணவு தயாரிக்கத் தொடங்கினாள் ஜனாபாய். ஓசை கேட்டு எழுந்த நாமத்தேவரும் மற்றவர்களும்கூட

இறைவனை தரிசித்து மகிழ தன் கையால் தயாரித்த உணவை பண்டரிநாத னுக்கு தானே பரிமாறும் அறிய வாய்ப்பு அந்த எளிய பக்தருக்கு கிடைத்தது. அவ ளுடன் அளவளாவி மகிழ்ந்து இறைவன், விடியும் நேரத்தில் ஆலயம் திரும்பினான்.

எந்த வேலை செய்தாலும், பாண்டு ரங்கனின் நினைவில் மூழ்கியவாறு அவன் நாமங்களை உச்சரித்தவாறே செய்வது ஜனாபாயின் வழக்கம்.ஒரு முறைமுக்தாபாய்,கபீர் போன்ற மகான்கள் நாமத்தேவர் இல்லத்திற்கு வந்திருந்தனர். அப்போது, பக்கத்து வீட்டு பெண் இந்த மகான்களிடம் வந்து ஜனாபாய் மீது.வினோதமான ஒரு புகார் கூறினாள்.

பசு மாட்டின் சாணியைக் கொண்டு தான் தட்டி உலர்த்தியிருந்த வரட்டியை, இந்த ஜனாபாய், தான் தட்டியதாக சொல்கிறாள் என்பது தான் அவள் வாதம். அவள் சொல்வதை கேட்டபடி உள்ளேயிருந்து வந்த ஜனாபாய் பண்ட ரிநாதனின் நாமத்தை சொல்லிக் கொண்டே நான் தட்டிய வரட்டிகள் தான் இவைகள்.

வரட்டியும் அந்த நாமத்தை சொல்லும், வேண்டுமானால் கேட்டுப்பாருங்கள் என்றாள். அவள் சொல்லியபடியே வரட்டிகளில் பண்டரிநாதனின் நாமம் ஒலிக்க கேட்ட மகான்கள், ஜனா பாயின் பக்தியின் ஆழத்தை உணர்ந்து மெய்சிலிரித்தனர். ஜனாபாயின் இறை பக்தியை உலகம் அறிய செய்ய திருஉள்ளம் கொண்டான் இறைவன்.

ஒரு நாள் இரவு, வீட்டில் இருக்கும் அனைவரும் உறங்கி விட்டனர். பாண்டு ரங்கன் மீது பாடல்கள் இயற்றிப் பாடியவாறே யந்திரத்தில் மாவு அரைக்க தொடங்கினாள். அவளது பாமாலைகளை நேரடியாக கேட்டு மகிழ இறைவனும் அங்கு வந்து சேர்ந்தான். இறைவனை நேரில் கண்ட ஆனந்தத்தில் கண்களில் நீர் வழிய, நான் தழுதழுக்க,அவனை போற்றும் கீதங்கள் அவள் நாவில் இருந்து வெள்ளமென பெருகின.



புன்முறுவலுடன் அவற்றை கேட்ட வாறு இயந்திரத்தை சுற்றுவதற்கு வசதியாக தன் பீதாபரத்தையும், ஆபரணங் களையும் கழற்றி வைத்து விட்டு ஜனாபாயின் பழைய போர் வையை போர்த்திக் கொண்டு மாவாட் ம் பணியை தானே ஏற்றுக் கொண்டான் பாண்டுரங்கன். பக்தை பாடுவதும், இறைவன் மாவு அரைத்துக் கொண்டே பாடல்களை கேட்டு மகிழ்வ துமாக அந்த அதிசயம் இரவு முழுவதும் தொடர்ந்தது.

விடிந்ததும் கோவிலுக்கு செல்லும் பக்தர்களின் ஓசை வெளியே கேட்கத் தொடங்கியது. ஜனாபாய் இதை கவனித்துச் சொல்ல, இறைவன், அப்போது அவன்

இருந்த கோலத்துடன் அவசர அவசரமாக ஆலயத்திற்கு திரும்பினான்.

கோவில் கருவறை கதவுகளைத் திறந்த அர்ச்சகர் திடுக்கிட்டார். அழ கிய பீதாம்பரம் ஒளி பொருந்திய ஆபரணங் கள் எதுவும் இல்லாமல், பழைய, கிழிந்த போர்வை ஒன்றை போர்த்திக் கொண்டு, நின்றிருந்தது பாண்டுரங்கனின் விக்கிரகம்.

இரவில் யாரோ இறைவனின் நகைகளை திருடி விட்டு பழைய போர்வையை போர்த்திச் சென்றுள்ளனர் என்ற செய்தி காட்டுத்தீ போல் பரவியது.

இறைவன் மேல் இருக்கும் போர்வை ஜனாபாயின் போர்வை என்பது விரைவிலேயே தெரியவர ,அவள் வீட்டிற்குள் புகுந்த காவலர்கள், அங்கு பாண்டுரங்கனின் ஆபரணங்களை கண்டு அதிர்ந்தனர்.

பண்டரிநாதனே இங்கு வந்திருந்தான் என்று நடந்த அனைத்தையும் விவ ரித்த ஜனாபாயைக் கண்டு காவலர் கள் சிரித்தனர். அவளை ஊர் தலை வரிடம் இழுத்துச் சென்றனர்.

நாமத் தேவரும், மற்றவர்களும் அவள் சார்பில் மன்றாடியது எல்லாம் பயனற்றுப் போனது. விசாரணையில் குற்றவாளி என்று தீர்மானிக்கப்பட்டு ,அவளுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. ஜனாபாய் எதற்கும் கவலைப்பட வில்லை.


அவள் வருத்தம் எல்லாம், எதற்கும் ஆசைப்படாத என்னை,இறைவனின் நகைகளைத் திருடியவள் என்று சொல்லி விட்டார்களே என்பது தான். எல்லாம் பாண்டுரங்கனின் திருவிளையாடல் என்று வருவதை எதிர்கொள்ள தயாரானாள். ஜனாபாய் தூக்கிலிடும் நேரம் நெருங் கியபோது ஓர் அதிசயம் நடந்தது. தலைக்கு மேல் தொங்கிக் கொண்டி ருந்த தூக்குக்கயிறு பூமாலையாக மாறி அவள் கழுத்தில் விழுந்து. ஜனா பாய்யின் பக்தியின் பெருமையையும், பாண்டுரங்கனின் திருவிளையாடலையும் எண்ணி, எங்கும் மகிழ்ச்சி ஆரவாரம் எழுந்து.

அதன்பின் ஜனாபாய் பண்டரிநாத னின் அடிமையாகவே மாறிப்போனாள். இறைபக்தியில் தோய்த ஜனாபாயின் நாவில் இருந்து நெஞ்சை அள்ளும் பாமாலைகள் பாய்ந்து பெருகின. இவற்றில் இன்று நமக்கு கிடைப்பவை சுமார் முன்னூறு மட்டுமே.

தன்னலமற்ற எளிய பக்தியின் உதாரணமாகத் திகழ்ந்த ஜனாபாய் பதினான்காவது நூற்றாண்டில், பாண் டுரங்கனின் திருவடி சேர்ந்தார். ஜனா பாயின் எளிய பக்தியை கடைபிடிப்பது நாம் உய்வதற்கான வழியாகும்.



ஒருவனே தேவன்



இந்து மதத்தில் தீவிர பற்றுடையவர் அரிசீதாராம் தீட்சித். பாபாவின் தரிசனத்திற்காக நண்பர்களுடன் ஷிர்டி வந்து தங்கியிருந்தார். அப்போது ஓர் நாள் தன்னையும் அறியாமல் நண்பர்களுடன் பேசிக் கொண்டிருக்கும் போது ஏசுவையும் அவர் கொள்கைகளையும் தரக் குறைவாக பேசிவிட்டார்.

பிறகு தீட்சித் அதனை மறந்து விட்டார். மறுநாள் காலையில் பாபாவை தரிசிக்க மசூதிக்கு வந்தார். அவர் படிகளில் ஏறும் சமயம் பாபா, ஏய்... அற்பனே, அங்கேயே நில் என்னை தரிசிக்கும் தகுதி இப்போது உனக்கு இல்லை. திரும்பிப் போ.... என்று கூச்சல் இட்டார்.

அரிசீதாராம் தீட்சித்துக்கு தூக்கி வாரிப் போட்டது ஒன்றும் புரியாது விழித்தார். என்ன, உனக்கு ஒன்றும் விளங்கவில்லையா என்றார் பாபா.

ஆமாம் சுவாமி, நான் என்ன தவறு செய்தேன் என்று இந்த மூடனுக்கு விளங்கவில்லை. தயவு செய்து என்னை மன்னித்து தவறை திருத்திக் கொள்வதற்கு ஒரு வாய்ப்பு வழங்குங்கள் சுவாமி என்று பாபாவின் பாதங்களில் பணிந்தார் தீட்சித்.


பாபா அவரை தூக்கி அணைத்துக் கொண்டு கூறினார் தீட்சித் நீ வணங்கும் இறைவனையோ, உன் பாபாவையோ, யாராவது ஏசினால் உன் மனம் என்ன பாடுபடும் அது போலத்தானே நீ ஏசுவை ஏசும்போதும் அவருடைய பக்தர்களின் மனமும் புண்படும் அல்லவா, அதுவன்றி உத்தம சீலர்களை உதாசீனப்படுத்தலாமா?

உன் ஆன்மாவிற்கு அல்லா யார்? ஏசு யார்? கிருஷ்ணன் யார்? சிவன் யார்? என்று பகுத்துணரும் பக்குவம் இருப்பின் இப்படி பேசியிருக்க மாட்டாய். இவ்வுலகினில் ராமும், ரஹீம்மும் ஒன்று என்பதை உணருங்கள் என்றார் பிரம்ம ஞானியான சாயி.

தீட்சித் கண்ணீர் மல்க அறியாமல் செய்த பிழையை பொருத்தருள்வீர் கருணாமூர்த்தியே என கதறி அழ ஆரம்பித்தார்.

சரி அழாதே தவறை உணர்ந்த மறுகணமே மனத் தூய்மையுற்றாய். உனது அறியாமையை அகற்றி ஆட் கொண்டோம் என்றார் பாபா. ◆

தொடர் –9:



பாபா காட்டும் வழி

எதை செலவு செய்கிறோமோ அது குறையும், இது இயற்கை நியதி. அதுபோலவே, நாம் செய்த பாவங்களை வெளியில் சொன்னால், பாவங்கள் குறையும், சரி புண்ணியங்களை வெளியில் சொன்னால், அதுவும் குறையத்தானே வேண்டும்.

இயற்கை நியதி என்பது எல்லாவற்றுக்கும் பொது தானே,இந்த விவரம் புரியாமல் செய்த சின்ன,சின்ன, புண்ணியங்களை எல்லாம் வெளியில் சொல்லி ,புண்ணியத்தை குறைச்சுட்டோமே,.... சரி,சரி, இனியாவது நாம செய்த பாவங்களை வெளியில் சொல்லி பாவங்களை குறைப்போம். பாவங்கள் குறையுதோ, இல்லையோ,மனசாவது சுத்தமாகும்.

1910ம் ஆண்டில் ஓர் நாள் லாலா லட்சுமி சந்த் என்பவர் தம் கனவில் தாடியுடன் கூடிய வயோதிகர் ஒருவர் தம் பக்தர்கள் சூழ அமர்ந்து இருப்பதைக் கண்டார். லட்சுமி சந்த் வரை அவரை இதற்கு முன் கண்டதில்லை. ஒரு சமயம் தாஸ்கனு மகராஜிடம் இருந்த படத்தில் இருந்து சீரடி சாய்பாபாவே தாம் கனவில் கண்ட உருவம் என அறிந்தார்.

அவருக்கு சீரடி சென்று பாபாவை தரிசிக்கும் ஆவல் ஏற்ப்பட்டது.அதற்காக ஒருவரிடம் 15 ரூபாய் கடன் வாங்கி கொண்டு புறப்பட்டார். வரும் வழியில் பாபாவைப் பற்றிய பல விவரங்களை கேட்டு தெரிந்து கொண்டே வந்தார்.

கடைசியில் சீரடிக்கு வந்து சேர்ந்து பாபாவின் முன்னாள் நின்றபோது பாபா கூறினார், ராஸ்கல்! எல்லோரையும் விசாரித்துக் கொண்டே வருகிறான்! ஏன் பிறரைக் கேட்கவேண்டும்? தன் கண்களால் கண்டதை பிறரிடம் கேட்பானேன்.

தன்னுடைய கனவில் கண்டது உண்மையா? இல்லையா? என்பதை ஒருவன் தானே தீர்மானிக்கவேண்டும்.ஒரு மார்வாடியிடம் இருந்து கடன் வாங்கி கொண்டு வந்து இருக்கிறான்.தரிசனத்திற்கு அப்படி என்ன அவசரம்.? ஆசை இப்போது நிறைவேறி விட்டதா?

பி.வி.தேவ் என்ற பக்தர் ஞானேஸ்வரி என்ற நூலை பாராயணம் செய்ய விரும் பினார். ஆனால் ஒவ்வொரு முறையும் பாராயணம் செய்யும் போதும் ஏதாவது தடைகள் ஏற்பட்டு வந்தது. எனவே பாபாவே அவரை படிக்க உத்தரவு இடும் வரை அதை படிப்பதில்லை என முடிவு செய்தார்.

அதன்படி அவர் சீரடி சென்று பாபாவிடம ஞானேஸ்வரி நூலை ஒரு ரூபாய் காணிக்கையுடன் கொடுத்து தாம் படிப்பதற்கு புத்தகம் தரும்படி கேட்டார். "ஏன் ஒரு ரூபாய்? இருபது ரூபாய் கொடு" என பாபா கேட்கவே தேவ் இருபது ரூபாய் கொண்டு வந்து கொடுத்தார்.

அப்படியும் பாபா பாராயணம் பற்றி ஏதும் கூறவில்லை. அன்று இரவு பாபாவின்

மற்றொரு பக்தரான பாலக்ராம் என்பவரை சந்தித்து பாபாவிடம் தான் பெற்ற அனுபவங்களை கூறி அவருடைய அனுபவங்களை கூறுமாறு கேட்டுக் கொண்டார்.

பாலக்ராம் மறுநாள் மாலையில் கூறுவதாக சொல்லி விட்டார். மறுநாள் தேவிடம் பாபா இருபது ரூபாய் தட்சிணை கேட்க தேவ் அதை பாபாவிடம் சமர்ப்பித்து விட்டு வேகமாக வந்து பாலக்ராமிடம் அவரின் அனுபவங்களை ஆர்வமுடன் கேட்கலானார். அவரும் கூற ஆரம்பித்தார்.

இதைக்கண்ட பாபா தேவ்வை தம்மிடம் வருமாறு அழைத்தார். தேவ் வந்ததும் பாபா கேட்டார், என்ன பேசிக்கொண்டிருக்கின்றாய்? உங்கள் மகிமையை பற்றி பாலக்ராமிடம் பேசிக்கொண்டிருந்தேன், என்றார் தேவ் பின்னர் அவரிடம் 25 ரூபாய் தட்சிணை கேட்க தேவ் அவ்வாறே செய்தார்.

பாபா அவரை எங்கேயும் செல்லாமல் மசூதியிலே உட்கார் என்று கூறிய பாபா திடீரென கடும் கோபம் கொண்டு "என்னுடைய கந்தையை ஏன் திருடுகிறாய்? தலை நரைத்தும் உனக்கு புத்தி வரவில்லையா? தடியால் அடித்து உன்னை கொல்லப் போகிறேன்?" என்று கர்ஜித்தார்.

பயந்து போன தேவிற்கு ஏதும் புரியவில்லை. பத்து நிமிட வசவிற்குப் பின் தேவ் வைபோ என அனுப்பி விட்டார். அரை மணி நேரம் கழித்து மீண்டும் தேவ்வை அழைத்து வரச்சொல்லி, அன்பா, கந்தையை திருடியதைப் பற்றி பேசி உன்னை புண்படுத்தி விட்டேனா, திருடு நடந்தால் அதைப் பற்றி பேசித்தானே ஆகவேண்டும். வேறு வழியில்லை.

எல்லாவற்றையும் கடவுள் பார்த்துக்கொள்வார் என்று கூறியவர், இப்போது என்ன செய்து கொண்டிக்கின்றாய் என்றார். தேவ் ஒன்றும் செய்ய வில்லை என்றார். "நீ தங்கியிருக்கும் இடத்திலேயே தினமும் பாராயணம் செய். நான் உனக்கு ஒரு சிறந்த சரிகை துப்பட்டாவை அளிக்க இருக்கையில் நீ ஏன் கந்தையை திருடவேண்டும்" என்றார்.

அதன்பின் தேவ் தினமும் காலையில் ஞானேஸ்வரியை பாராயணம் செய்து வந்தார். தடைகள் எதுவும் நேரவில்லை. பாபாவின் சக்தியை நேரிடையாக அறிந்து கொள்ளும் வாய்ப்பு தேவ்விற்கு கிட்டியது. அதை பற்றி மற்றவர்களின் அனுபவங்களை கேட்க வேண்டிய அவசியம் இல்லை.

இம்மாதிரி சொந்த அனுபவத்தையே பாபா சரிகை துப்பட்டா என்றும், மற்றவர்கள் மூலமாக கேட்பதை கந்தல் துணியை திருடுவதற்கு ஒப்பாகும் என பாபா தமக்கு உணர்த்தியதை தேவ் உணர்ந்தார். இதுபோலவே பாபா காட்டும் வழியை நாமும் உணர்வோம்.

- (தொடரும்..)

சாய் ராஜ யோகா

இயற்கை நலவாழ்வு மையம்

யோகா, பிராணாயாமம், தியானம், யோகா தெரபி



உடலும் உள்ளமும் ஆரோக்கியத்துடன் ஆனந்தமாய் வாழ அனைவருக்கும் எளிய மூச்சுப் பயிற்சி, ஆசனப் பயிற்சி, தியானப் பயிற்சி,குண்டலினி யோகி ஸ்ரீராம சாது அவர்களின்

குறுகிய கால பயிற்சி வகுப்புகள்

சாய் ராஜ யோகாவின் ஆனந்த கிரியா 1 நாள் பயிற்சி

(வயிறு சம்பந்தப்பட்ட பிரட்சனைகள், கொழுப்புக் கட்டி, நீர்க்கட்டி, மாதவிடாய், குழந்தையின்மை, செரியாமை, சுறுசுறுப்பின்மை, மலச்சிக்கல், சளி தொந்தரவு, ஆஸ்துமா, வீசிங், மனசோர்வு, மூட்டுவலி, உடல்வலி ஞாபகமறதி நீங்கும் அற்புதப் பயிற்சி)

எளிய முறை யோக ஆசனப் பயிற்சி 2 நாள் பயிற்சி

(நீரிழிவு, முதுகுவலி, உடல் பருமன், இதயநோய், ஒற்றை தலைவலி, ஆண்மைக்குறைவு, தூக்கமின்மை, மன அழுத்தம், ரத்த அழுத்தம், கண் நோய் தீர ஆசனப் பயிற்சி)

தன்னை உணர குண்டலினி யோக தியானம் 8 நாள் பயிற்சி

(வாழ்க்கை வளத்தை, உடல் நலத்தை சரி செய்யும் யோகசக்கரங்கள், குண்டலினியின் இருப்பு, ஏறுபடி, இறங்குபடி, குண்டலினி யோகத்தின் மூலம் ஆத்மஞானம், பிரம்ம ஞானம் அடைவது இல்லற இன்பங்களை குறைவின்றி அனுபிவித்து இறையுணர்வோடு வாழ்தலைப் பற்றி ஞானம்)

மாதம் தோறும் முதல் ஞாயிற்றுக்கிழமை மௌனம், பயிற்சி நிகழும். அனைத்துப் பயிற்சிகளுக்கும், கட்டணங்களுக்கும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு விபரம் அறியவும்.

No: 17/7.A.Palaniyappa 1st St, 1st Floor Ayyanavaram, Chennai-23

9941816692, 8825831068

அன்னதான சேவை

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே...

நமது சாயி மகராஜ் குருவை தேடி பத்திரிகையின் சார்பாக, பிரதிவாரம் வியாழன் தோறும், நடமாட முடியாமல் இருக்கும் முதியோர்கள், உடல் ஊனமுற்றோர்கள், மனநலம் குன்றியோர்களின் இருக்கும் இடம் தேடி சென்று அன்னதான சேவை நடந்து வருகிறது. அன்னதான சேவையில் பங்குபெற காணிக்கை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி உதவலாம்.

S.Jayanthy,

17/7 **A**, *பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,*
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைனில் அனுப்ப:

S.Jayanthy, INDIAN BANK
AC.No: 602264370 , IFS Code No: IDIB000P056
(Purasaiwakkam Branch) Chennai

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்:

1. திரு.விஜி ஸ்ரீதர் - சாய் அன்பர்கள், பெங்களூர். - ரூ 1700
2. திரு.பா.செந்தில்குமார். சென்னை - ரூ.1000
3. தி.கார்த்திகேயன்.கோவை - ரூ.2000
4. திரு. மகேஷ். சென்னை - ரூ.1000
5. திருபார்த்திபன் லெட்சுமிதேவி,சென்னை - ரூ.500
6. திருமதி. லலிதா, சென்னை - ரூ.500
7. திருமதி. ஹேமாவதி நமசிவாயம் ,சென்னை - ரூ.400
8. திரு. சுந்தர் சாய், சென்னை - ரூ.100
9. திருமதி.பாக்கியவதி, ராணிப்பேட்டை - ரூ100
10. திருமதி.ஜெயசாந்தி, AYK - ரூ.200
11. திருமதி.செல்வி,AKY - ரூ.200
12. திருமதி. ஷீலா, சின்னாளப்பட்டி - ரூ. 200



13. திருமதி. குமுதா, சின்னாளப்பட்டி - ரூ.100
14. திருமதி. நாகு, மதுரை - ரூ.100
15. திருமதி. மீனா, மதுரை - ரூ.100
16. திருமதி. சாந்தி, AYK - ரூ 100
17. திருமதி.அபிராமி AYK - ரு100
18. திருமதி. உமாராணி AYK - ரூ100
19. திருமதி. புஷ்பவள்ளி AYK - ரூ100
20. திருமதி. தனலட்சுமி AYK - ரூ.100
21. திருமதி. பஞ்சவர்ணம் AYK - ரூ100
22. திருமதி. நித்யா - ரூ.100
23. திருமதி. சுப்புலட்சுமி AYK - ரூ.100
24. திரு. அகஸ்டின், திருநீர்மலை - 1மூ அரிசி
25. திரு. பாலாஜி, போரூர் ஆயில் - 5லி
26. திரு.சாந்த மூர்த்தி, போரூர் ஆயில் - 5லி





தீங்கள் செய்யும் அன்ன தானத்தின் ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம் !

சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* 1 வருட சந்தா – ரூ. 150 (தபால் செலவு உள்ளட)
* 3 வருட சந்தா – ரூ. 400 (தபால் செலவு உள்ளட)
* ஆயுள் சந்தா – ரு. 1,500 (தபால் செலவு உள்ளட)

காணிக்கை, சந்தா அனுப்புகின்றவர்களுக்கு மாதம்தோறும் சாயிமகராஜ் குருவை தேடி புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும். காணிக்கை சந்தா அனுப்புகிறவர்கள் தவறாது தங்கள் முகவரியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

V. ஸ்ரீராம், ஆசிரியர்

'சாயி மகராஜ் குருவை தேடி',

17/7 A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,
அனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைன் மூலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM

INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai

AC.No: 6219480677

IFS Code No: IDIB000P056.

ஆயுள் சந்தாதாரர்கள்

15. ஏ.ராமலிங்கம் அவர்கள், கோவை

16. கே.நாகராஜன் அவர்கள், கோவை

17. வி.ஆர்.ரமேஷ்குமார் அவர்கள், சென்னை

18. பி.மகேஸ்வரி புருஷோத்தமன், சென்னை

19. எஸ். அரவாமுதன், சென்னை

20. ASV. REMEDIES INDIA, CHENNAI

21. தி.கார்த்திகேயன், கோவை – ரூ.5000.

22. பா.செந்தில்குமார், சென்னை – ரூ.3000.

Owned and Publishsed by: V.SRIRAM From 17/7A, Palaniappa Ist Street, 1st floor, Ayyanavaram, Chennai - 23. At Printed by him at Chennai Offset Printer, No: 19/1, 21/2 Kitapath Khan Phathr St, Elles Road, Chennai-2. Editer:V.SRIRAM

FAITH PATIENCE



TO ADVERTISE IN

SAI TV

G.MHAADHAVHARAAJ

CONTACT -MOBILE :6382771587



MOUTH MELTERS™

Your search for a sandwich ends here

OUR MOTTO:

FOOD WHICH MELTS IN YOUR MOUTH, HEALTHY AND DELICIOUS WITHOUT DENTING YOUR POCKET

OUR MISSION:

KEEP CREATING HEALTHY & TASTY VEGETARIAN FOOD VARIETIES TO MEET THE EVER GROWING DEMAND OF THE PALATES

WHAT WE DO DIFFERENTLY?

- WE MAKE OUR OWN SAUCES (KETCHUP, MAYO, DRESSINGS, HOT SAUCE, ETC.)
- WE DO NOT USE ANY FROZEN FOOD. WE MAKE OUR OWN FRENCH FRIES, BURGER PATTIES, ETC.
- ALL INGREDIENTS ARE CAREFULLY CHOSEN TO BE CHEMICAL FREE AND HEALTHY
- WE USE ORGANIC INGREDIENTS AS MUCH AS POSSIBLE
- WE DO NOT USE MSG OR OTHER HARMFUL CHEMICALS
- OILS WE USE ARE CAREFULLY CHOSEN TO BE HEALTHY (OLIVE, RICE BRAN, CANOLA, TOASTED SESAME)
- WE FILL YOUR STOMACH, BUT WON'T EMPTY YOUR WALLET... AFFORDABLE PRICES!
- WE CARE FOR YOUR HEALTH AND IT SHOWS!!!

15 MINUTES OF FREE WIFI WITH EVERY PURCHASE !!!



MOUTH MELTERS™

Your search for a sandwich ends here

#6/13, Corporation Complex, 3rd Cross Road,
Raja Annamalai Puram, Chennai - 600 028.
☎ 044-48619080 ✆ +91-9840097548
✉ sales@mouthmelters.com

www.mouthmelters.com



MOUTH MELTERS™

Your search for a sandwich ends here

PURE VEG

LIFE IS LIKE A SANDWICH...
FILL IT WITH BEST INGREDIENTS...



மொத்த விற்பனை விலையில்
WHOLESALE PRICE



Karayil Trading Company

G/B52, Wholesale Food Grain Market, Koyambedu, Chennai
Ph: 9841289911, 9841495253, 8056406222

fssai

குறைந்த விலை | உயர்ந்த தரம் | அதிக சேமிப்பு

100 கிராம் விலை / Price per 100 Gms

மசாலா மற்றும் பருப்பு	Price - 1 Kg	500 Gms
Coriander / மல்லி	95	42.50
Red Chilly / நீண்ட சிவப்பு மிளகாய்	130	65
Toor Dal / துவரம் பருப்பு	85	42.50
Urad Dal / உளுத்தம் பருப்பு	88	44
Pacha Payiru / பச்சை பயிரு	84	42
Kadala Paruppu / கடலை பருப்பு	72	36
Siru Paruppu / சிறு பருப்பு	80	40
Black Channa / கருப்பு கடலை	72	36
White Channa / வெள்ளை கடலை	80	40
Ground Nut / நிலக்கடலை	110	55
White Karamani / வெள்ளை காராமணி	95	47.50
Brown Karamani / சிகப்பு காராமணி	105	52.50
Pottu Kadalai / பொட்டுக் கடலை	90	45
Motchai / மொச்சை	85	42.50
Javvarisi / ஜவ்வரிசி	75	37.50
Green Peas / பச்சை பட்டாணி	79	39.50
Sugar / சர்க்கரை	38	19
Tamarind White / வெள்ளை புளி	180	90
Tamarind Black / கருப்பு புளி	160	80
Paav Jaggery / பாகு வெல்லம்	58	29
White Jaggery / அச்சு வெல்லம்	53	26.50
சத்துமாவு	200	100.00

கோயம்பேடில் இருந்து 6 கி.மீ. சுற்றளவில் விநியோகம் இலவசம். அதற்கு மேல் 1 கி.மீட்டருக்கு ரூ.5.

Free Home Delivery With 6 KM Radius From Koyembedu. Beyond that will be Rs.5/- Per Km.

Prices Subject to Market Rates.

விலை சந்தை விகிதங்களுக்கு உட்பட்டது.